தமிழறி மடந்தை கதை

பதிப்பாசிரியர்

மணி.மாறன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

T. 22798

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 546

தமிழறி மடந்தை கதை

பதிப்பாசிரியர்

மணி. மாறன், M.A.,(T), M.A.,(H), B.L.I.S.,

தமிழ்ப் பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும்

ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2013] [விலை: ரூ. 80-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	தமிழறி மடந்தை கதை
ஆசிரியர்	:	மணி. மாறன், தமிழ்ப் பண்டிதர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	546
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2013
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 X 14 செ.மீ.
பக்கங்கள்	:	108
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோர்ப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	இலக்கியம்
விலை	:	ரூ. 80-00

வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழி களஞ்சியமாய்த் திகழும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 7,700க்கு மேற்பட்ட தலைப்புகளில் தமிழ் ஓலைச்சுவடிகள் உள்ளன. இச்சுவடிகளிலிருந்து மிகச்சிறந்த இலக்கண, இலக்கிய, மருத்துவ, சோதிட, கணித, கதை நூல்கள் பதிப்பிக்கப்பெற்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வெளியிடப்பெற்று வருகின்றது.

வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வழியாகவோ சொல்லப்படும் கற்பனை நிகழ்ச்சிகளின் தொகுப்பு கதையாகும். ஒரு கதையின் முக்கியமான சிறப்பு அடுத்து என்ன நிகழ்ந்தது என்று அறிய வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகும். காவியம், கதைப்பாடல், நாடகம், புதினம், சிறுகதை ஆகிய பல இலக்கிய வகைகளுக்கும் கதையே அடிப்படையானது ஆகும்.

கதைகள், இன்ப முடிவு கொண்டவை, துன்ப முடிவு பெற்றவை, அவலம், நகை, களிப்பு போன்ற ஏதேனும் ஒரு சுவையை மிகுதியாகக் கொண்டவை. வீரம், காதல் பற்றிப் பேசுபவை. துப்பறியும் கதை, உளவியற் கதை, நனவோடை கதை, அங்கதக்கதை, தத்துவக்கதை, சமயக்கதை, எதிர்காலம் பற்றிப் பேசும் அறிவியல் கதை என்று கதைகள் பல திறத்தன.

கதை சொல்லும் முறையில் பல்வகையான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பறவைகளையும், விலங்கு களையும் பாத்திரங்களாகக் கொண்ட கதைகள், தேவர்களையும், தேவதைகளையும் பற்றிக் கூறுபவை. ஆண் பெண் வாழ்வை அப்படியே இயற்கையாகப் படம் பிடித்துக் காட்டுபவை. வரலாற்றுப் பாத்திரங்களை சேர்த்து இயக்குபவை, ஆசிரியனின் வாழ்க்கையையே அடிப்

படையாகக் கொண்டவை, கதைக் கருவிற்கு முக்கியத்துவம் தருபவை, உத்திகளுக்குச் சிறப்பு அளிப்பவை என்றெல்லாம் கதையின் வரலாறு படிப்படியாக வளர்ந்துள்ளது.

அவ்வகையில் இந்நூலக ஏட்டுச் சுவடியில் அமைந்த நக்கீரர், ஔவையார், தமிழ்ச்சங்கம், கரிகால் சோழன், பாண்டிய மன்னன் என்றெல்லாம் பாத்திரப் படைப்புக்கள் கொண்ட தமிழறியும் மடந்தை என்னும் கதையினை நூலகத் தமிழ்ப் பண்டிதர் த. ம. சரபோஜி (என்கிற) மணி. மாறன் மிகவும் சிறப்பான நூலாகப் பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூலினை வெளியிட நிதியுதவி நல்கிய நடுவண் அரசிற்கும், புதிய வெளியீடுகளை விரைந்து வெளியிடும் ஆர்வம் கொண்டு சிறப்புடன் பணியாற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் ச. நடராஜன், B.Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப்பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் வாழ்த்துதலையும், பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
16-07-2013.

கா. பாஸ்கரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

பதிப்பாசிரியர் உரை

கதை என்பது ஒரு காரணச்சொல். ஏதாவது ஒரு பொருள் அல்லது செயல் பற்றி விரிவாகக் கூறுவது கதை ஆகும். கதையானது எக்காலத்திலும், எல்லோராலும் விரும்பப்படுவதாகும். எளிய இலக்கியமாகவும், இனிய பொழுது போக்காகவும் அமைவது கதை. மெய்யும் பொய்யும் அளவோடும், அளவற்றும் கலந்து சுவையோடு தருவதுடன், மனிதனின் வாழ்க்கைக் கூறுகளை அங்குமிங்குமாகக் குறிப்பிட்டுக் காட்டுவதனால் கதைகள் மக்களால் விரும்பப்படுகிறது. கதைக் கருத்துக்கள் வாழ்வியல் தொடர்பாகப் பின்னப்பட்டு வாழ்க்கை சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் எழுதப்பெற்றுள்ளன.

பழங்காலந்தொட்டே நம் மக்களிடையே கதை சொல்லும் வழக்கம் இருந்து வருகின்றது. அக்காலத்தில் கிராமங்களில் பாட்டி கதை சொல்லுவார். அதே போல ஊர் ஊராகச் சென்று கதையினை பாடலாகவும், வசனமாகவும் சொல்லுவதற்கென்றே குழு இருந்தது. ஊரில் நடைபெறும் திருவிழாக் காலங்களில் இக்குழுவினர், கதைப் பாடல்களாகச் சொல்லி வந்தனர்.

உதாரணத்திற்கு பஞ்ச பாண்டவர் கதை, இராமாயண மகாபாரதக் கதைகள், அரிச்சந்திரன் கதை, வள்ளித் திருமணம், அல்லி அரசாணி மாலை, நளன் கதை, ருக்மாங்கதன் கதை, பக்த பிரகலாதன் கதை, மரியாதை ராமன் கதை, வீணாதி வீணன் கதை, அண்ணன்மார் சுவாமி கதை, முத்துப்பட்டன் கதை, சுடலைமாடன் கதை, நல்லதங்காள் கதை, தேசிங்குராஜன் கதை, ஐவர் ராசாக்கள் கதை, வன்னியடி மறவன் கதை, காத்தவராயன் கதை, கட்டபொம்மன் கதை, ஆரவல்லி சூரவல்லி கதை போன்ற பல்வேறு கதைகள் மக்களால் ஏட்டுச் சுவடியில் எழுதி வைத்துக்கொண்டு ஊரின் பொது இடத்தில் அல்லது பொது மேடையில் நிகழ்த்தப்பெற்று வந்தது.

இது போன்ற கதைகளைக் கூறுவதன் மூலம் சமுதாயத்தில் மக்களிடையே நல்லிணக்கம், நற்பண்புகள் ஏற்படவும் இளஞ் சிறார்களை சிறந்தவராக உருவாக்கக் கூடிய நல்ல கதைகளும், நீதிக்கருத்துக்களும் அமையவும் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும், நாடகங்கள் தோன்றின. அவை மேலும் வளர்ந்து இன்று திரைப்படங்கள் வாயிலாக கதை சொல்லப்பட்டு வருகின்றது.

கோயில் திருவிழாக்கள் மூன்று நாட்கள், ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் என நடைபெறுவது வழக்கில் இருந்த காலத்தில் இதுபோன்ற கதைகள் இரவு முழுவதும் விடிய, விடிய நடத்தப்படுவது உண்டு. தமிழ் மக்களின் வாழ்க்கை இயல்புகளும், உணர்வோட்டங்களும் இலக்கியப் படிமங்களாகத் தமிழகமெங்கும் காலங்காலமாகப் படிந்து கிடக்கின்றன. மக்களின் பண்பாட்டைப் புலப்படுத்தும் காலக் கண்ணாடிகளாக அவை விளங்குகின்றன.

அளகாபுரி மன்னனான அளகேஸ்வரனுக்கு ஏலாங் குழலாள் என்ற ஒரு பெண் அழகே உருவமாய் பிறக்கிறாள். பாடலிபுத்திரம் நகரின் அதிபதியான பத்திரகிரி என்ற மன்னனுக்கு சந்தன குமாரன் என்றொரு மகன் இருக்கிறான். அவன் படிப்பில் நாட்டமில்லாதவனாய் தந்தையுடன் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி பல தேசத்து அழகினையும் கண்டுகளித்துச் செல்லும்போது ஒருநாள் அளகாபுரியை வந்தடைகிறான்.

அங்கு தன் தோழியருடன் இருந்த ஏலாங்குழலாளைக் கண்டு தன் மனதைப் பறிகொடுக்கிறான். அவளும் இவனிடம் தன் மனதை பறிகொடுத்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்த மாத்திரத்திலேயே காதல் கொள்கின்றனர். அரசகுமாரி வித்தை கற்றவளாதலால் தன் காதில் அணிந்திருந்த ஓலையில் கை நகத்தினால் சாவடிக்கு இரவு வருமாறு செய்தியினைக்கீறி அதை அரசகுமாரன் முன்பு போடுகிறாள்.

அரசகுமாரனுக்கு எழுதப் படிக்கத் தெரியாததால் அதை சாவடி முன்பு படுத்துக்கிடக்கும் குட்டரோகியிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லுகிறான். நயவஞ்சகம் கொண்ட அவன் அரசகுமாரியை அடைய விரும்பி இவ்வூர் மன்னன் தங்களை எங்கு கண்டாலும் கொன்றுவிடச் சொல்லி ஆணையிட்டுள்ளான். ஆதலால் நீங்கள் இவ்விடத்தை விட்டு உடனே வெளியேற வேண்டும் என்று ஓலையில் எழுதியுள்ளது என தவறாகப் படித்துக் காட்டுகிறான்.

தான் ஏதும் தவறு செய்யவில்லையே, என்ன காரண மென்று புரியவில்லையே என்ற குழப்ப நிலையில் அவ்வூரை விட்டு வெளியேறுகிறான். அன்றிரவு அரசகுமாரி தான் ஓலையில் குறிப்பிட்டு இருந்த சாவடிக்கு வருகிறாள்.

அரசகுமாரி தான் காலையில் பார்த்த அரசகுமாரன், இவன்தான் என்றெண்ணி குட்டரோகியைக் கட்டியணைத்து முத்தமிடுகிறாள். உடனே அவன் மீதுள்ள இரத்தமும், சீழும் அரசகுமாரி உடை முழுதும் பட்டு ஈரமாகிவிடுகிறது. உண்மை யறிந்த அரசகுமாரி அவமானம் தாளாமல் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். இதனைக் கேள்வியுற்ற அரசகுமாரனும் தற்கொலை செய்து கொள்கிறான். இதிலிருந்து அவர்களுடைய மறுபிறவி கதை தொடங்குகின்றது.

தமிழ்ச் சங்க புலவன் நக்கீரனும், கரிகாற்சோழ பெருவளத்தானும், ஔவை பிராட்டியாரும், பாண்டிய மன்னனும் இக்கதையின் பாத்திரப் படைப்புகளாக வருவது இப்படைப்பின் தனித்தன்மையைக் காட்டுகிறது.

தமிழில் இன்று வழக்கொழிந்த சில சொற்களான ஆவேசம், மண்டலீகர், அரதேசி, தோவத்தி, கற்றுச்சொல்லிகள், பரியம், அலவன், அசனம், சலக்கமாடி, பாதக்குறடு போன்றவை இக்கதையில் கையாளப்பட்டுள்ளது.

இந்நூலினை வெளியிட பெருந்தன்மையுடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **கா. பாஸ்கரன்,** இ. ஆ. ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். இப்பணிகளுக்கு ஊக்கமளித்து, தேவையான உதவிகளை செய்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் **ச. நடராஜன்,** B.Sc., அவர்களுக்கும், இந்நூல் முழுவடிவம் பெற அனைத்து வகையிலும் உதவி செய்த நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்** அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள். நூல் அச்சு வடிவம் பெற்று வெளிவர நிதி நல்கும் நடுவணரசிற்கும் நன்றி !

இந்நூலினை கணினியில் தட்டச்சு செய்தளித்த நூலகப் பணியாளர் க. மனோகரன், ஆட்டோ பிரிண்டரில் அச்சிட்டு வழங்கிய எஸ். முருகானந்தம், நூலாக்கம் பெற துணை நின்ற இந்நூலகத்தின் சம்ஸ்கிருத பண்டிதர் எல். அனிதா, செவ்வனே மெய்ப்புத் திருத்தம் செய்தளித்த பி. இரம்யா மற்றும் புத்தகக்கட்டும் பணி செய்த கு. அஞ்சையன், உ. மகேஷ், அ. பாலசுப்ரமணியன் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அழகுடன் அட்டை அச்சிட்டளித்த கே. ஆர். பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் நன்றி.

மணி. மாறன்
தமிழ்ப் பண்டிதர்.

தமிழறி மடந்தை கதை

காப்பு

சண்பகமே வீசுந் தமிழறிவாடன்பேரில்
பண்புடனே செந்தமிழைப் பாடுதற்கு - என் புவியில்
வேளைவிழித்தெரித்த வித்தகனார் பெற்றெடுத்த
காளை மதக்களிறே காப்பு.

முன்னொரு காலத்தில் அளகாபுரி என்றொரு நகரம் இருந்தது. அந்நகரினை அரசாட்சி செய்து வந்த மன்னன் அளகேஸ்வரன் என்பவன் ஆவான். அம்மன்னவனுக்கு ஒரு பெண்குழந்தைப் பிறந்தது. அவளுக்கு ஏலாங் குழலாள் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான். அப்பெண்ணானவள் வளர்ந்து பெரியவள் ஆனதும், பன்னிரண்டு நிலை கொண்ட உப்பரிகையின் மேலே தன் தோழியர்களுடன் விளையாடிக் கொண்டு இருந்தாள்.

மற்றொரு தேசத்திலே பாடலிபுத்திரம் என்ற ஒரு நகர் இருந்தது. அந்நகரின் அதிபதியான பத்திரகிரி மன்னனுக்கு சந்தனகுமாரன் என்றொரு மகன் இருந்தான். அவனை மன்னன் ஆசிரியரிடம் சென்று பாடம் கேட்டு தேர்ச்சிபெற அனுப்பி வைத்தான். ஆனால் அவனுக்கோ வித்தையில் நாட்டமில்லை. கல்வி மனதில் ஏறவில்லை. மூடனாக இருந்தான். இதனைக் கண்ட அவன்

தந்தையும், மன்னனுமான பத்திரகிரி, இதுபோன்ற கல்வியறிவு அற்ற பிள்ளை தனக்கு இருப்பதும், இல்லாமல் இருப்பதும் ஒன்றே என்று மனம் சலித்துக் கூறினான்.

சந்தனகுமாரன் தனக்கு எழுத்து வாசனை இல்லாமல் இருப்பது கண்டு, தன் தந்தை கோபித்துக் கொண்டதை மனதில் எண்ணி, வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்று பல்வேறு தேசங்களையும் சுற்றித் திரிந்து, அந்தந்த நாடுகளின் புதுமைகளையும் கண்டு தெரிந்து, வீட்டிலிருந்து புறப்பட்ட ஓர் ஆண்டு கழித்து, அளகாபுரி நகரினை வந்தடைந்தான். அந்நகரின் அழகினையும், புதுமையினையும் கண்டவாறே, இனி அடுத்த தேசம் செல்லலாம் என எண்ணிக்கொண்டு வருகையில் யதேச்சையாக அரசகுமாரி ஏலாங்குழலாள் விளையாடிக் கொண்டிருந்த உப்பரிகையை அண்ணாந்து பார்த்தான். அந்த உப்பரிகையின் மேலே பூரண சந்திரன் உதயமானது போல், பந்தடித்துக் கொண்டு இருந்த அழகே உருவான அரச குமாரியைக் கண்டான். அந்த அரச குமாரியும், பாலசூரிய பிரகாசமான அரசகுமாரனைக் கண்டாள். கண்டவுடனே இருவரும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர்.

அப்போது ஒருவருக்கொருவர் பேச இயலாத நிலையில் நின்றுகொண்டிருந்தனர். அரசகுமாரி தான் வித்தை கற்றவள் ஆதலால், தன் காதில்

அணிந்திருந்த ஓலையினை எடுத்து, மை நகத்தினால் ஒரு செய்தியினை எழுதினாள். அச்செய்தி இந்நகருக்கு மேற்குப் புறத்திலே மண்ணோட்டமென்றொரு திருவாசற் சாவடி இருக்கிறது. அதிலே போய் நீங்கள் இருங்கள். இன்று இரவு ஆனதும் உங்களைக் காண நான் வருகிறேன் என்று எழுதி அந்த ஓலையை அரசகுமாரன் முன் போட்டாள். அவனும் அந்த ஓலையினைக் கையில் எடுத்துக்கொண்டு, தனக்கு எழுத்து வாசனை இல்லாததால், யாராவது எழுதப் படிக்கத் தெரிந்தவர் கையில் கொடுத்துப் படித்துக் காட்டச் சொல்லலாம் என்று எண்ணிக்கொண்டே தன்னிச்சையாக அரசகுமாரி குறிப்பிட்ட அந்தத் திருவாசற் சாவடிக்கே வந்து சேர்ந்தான்.

அத்திருவாசல் சாவடியில் குட்டநோய் கொண்டவன் ஒருவன் படுத்திருந்தான். அரசகுமாரன் அவனிடம் சென்று உனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா? என்று கேட்டான். அவனும் தெரியுமே என்றான். இவன் தன்னிடமிருந்த ஓலையை அவனிடத்தே கொடுத்துப் படிக்கச் சொன்னான். அந்த ஓலையில் இருந்த செய்தியைக் கண்ட குட்டரோகி வஞ்சகம் எண்ணம் கொண்டு, அரசகுமாரியை அடைய விரும்பி, ஓலையில் உள்ள செய்திக்கு மாறுபாடாக அரசகுமாரனிடம், ஐயா இந்த அநியாயமான நகருக்கு ஏன்? வந்தீர். இந்நகருக்கு தாங்கள் ஏதேனும் தீங்கு

செய்துள்ளீர்களோ தெரியவில்லை. ஆதலால் இந்நகரின் மன்னன் உங்களைக் கண்ட இடத்திலே கொல்ல வேண்டும் என்று உத்திரவு பிறப்பித்து, காவலாளி கையில் தன் முத்திரை ஓலையைக் கொடுத்து அனுப்பியுள்ளார். அக்காவலர்கள் உன்னைத் தேடிக்கொண்டு திரிகிறார்கள். நீ அவர்களின் கண்ணில் பட்டால் உடனே உன்னைக் கொன்று விடுவார்கள். எனவே உம்மை இப்பொழுதே புறப்பட்டு சென்றுவிடுக என்று எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதனைக் கேட்ட அரசகுமாரன் இது அநியாயமாக இருக்கின்றதே, நான் எந்தத் தவறும் செய்ய வில்லையே என்று எண்ணியபடி பயந்துபோய் அந்நகரினை விட்டு ஓடிப்போனான்.

அதன்பிறகு குட்டரோகியும் எழுந்து ஒரு கிளிஞ்சல் ஓட்டை எடுத்துக்கொண்டு குளக் கரைக்குப் போய் உடம்பு குளித்து, உடம்பிலே இருக்கிற சொறி போகும்படி கிளிஞ்சல் ஓட்டினாலே நன்றாய் சுரண்டிப் போட்டு, இலுப்பைப் புண்ணாக்கும், மஞ்சளும் போட்டு தேய்த்துக் குளித்து நன்றாகச் சுத்திப் பண்ணிக் கொண்டு, தன்னுடைய துணியைத் துவைத்து உலர்த்திக் கொண்டு, இருட்டின பிறகு அந்தச் சாவடியிலே வந்து ஒரு மூலையில் படுத்துக் கொண்டான்.

அரசகுமாரியும் அன்று இரவு அரசகுமாரனுக்குச் சாப்பாடும், அதற்கேத்த

பதார்த்தங்களும், மணம் வீசும் கந்த கஸ்தூரி போன்ற திரவியங்களும், ஆடை ஆபரணங் களையும் ஒரு பெட்டியினுள் வைத்து மூடி முடிச்சிட்டு அப்பெட்டியினை ஒரு தாதியை அழைத்து, அவள் தலைமீது வைத்து எடுத்துக் கொண்டு, உப்பரிகையின் மேலேயிருந்து நூலேணியின் மூலம் இருவரும் கீழே இறங்கி எவரும் அறியாத வண்ணம் புறப்பட்டு அந்த திருவாசல் சாவடியினை வந்தடைந்தனர்.

அங்கு வந்து பார்க்குமளவில் மூலையிலே படுத்திருப்பவனைக் கண்டாள். இவன்தான் நாம் பகலில் கண்ட அரசகுமாரன் என்று நினைத்து, அவன் மீது கொண்ட ஆசையினாலே ஓடிவந்து மூலையிலே படுத்திருந்த குட்டரோகியைக் கட்டிக்கொண்டாள். கட்டிக்கொண்டவுடனே அவன் உடம்பு, இவள் உடம்பிலே பட்ட மாத்திரத்தில் சீழும், இரத்தமும் துர்நாற்றமும், துணியெல்லாம் நனைந்து தண்ணீர் வந்து அத்திப்பால் தோய்த்தது போலவும், அவன் உடம்பிலே இருக்கின்ற சொறிகள் பலாக்காயின் முள் தைக்கிறது போலவும் இருந்தது கண்டு, அரசகுமாரி அறுவெறுப்பு கொண்டு, அதை நினைத்துப் பொறுக்க முடியாதவளாய், இவன் நாம் கண்ட அரசகுமாரன் அல்ல. ஏதோ சூழ்ச்சி நடந்துள்ளது என்று எண்ணி மனம் நொந்து தன் உயிரை விட்டாள்.

அரசகுமாரியுடன் வந்த தாதி இதனை கண்டு கலங்கி மிகவும் பயந்து கை, கால் நடுக்கமுற்று

செய்வதறியாது திகைத்தாள். தெய்வமே! இந்நேரத்தில் நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள் என்று மன்னர் கேட்டு அறிந்தால் என்னைக் கொன்று விடுவாரே என்று எண்ணியவளாய், பதார்த்தங்கள், ஆடை, ஆபரணங்கள் கொண்டு வந்த பெட்டியி லிருந்து அவைகளை எல்லாம் வெளியே எடுத்து குட்ட ரோகியின் அருகில் வைத்துவிட்டு, அந்தப் பெட்டிக்குள்ளே இறந்த ஏலாங்குழலாளின் உடலை வைத்து கட்டிக்கொண்டு, முன் வந்த வழியே சென்று, நூலேணி மூலம் மேலே ஏறி உப்பரிகையின் உள்சென்று, கட்டிலின் மீது பிணத்தை வைத்துவிட்டு, யாதும் அறியாதவள் போல் மன்னரிடம் சென்று, சுவாமி என்னவென்று தெரியவில்லை அரசகுமாரி கட்டிலில் இறந்து கிடக்கின்றாள் என்று கூறினாள்.

இதைக் கேட்ட மன்னன் ஓடிவந்து இறந்து கிடந்த தன் மகளைக் கண்டு, ஏதேனும் விஷம் தீண்டி இறந்திருப்பாளோ? அல்லது பேய், பிசாசுகள் அறைந்து கொன்றிருக்குமோ? தெரிய வில்லையே என்று புலம்பியவனாய் மனம் கலங்கி நின்றான். பின் விடிந்ததும் பெண்ணை தகனம் செய்ய ஏற்பாடு செய்தான். பின் இதற்குண்டான கடனெல்லாம் செய்து முடித்தான்.

அதன் பிறகு சில நாட்கள் கழித்து, முன்னர் பயந்து ஓடிப்போன அரசகுமாரன், அரசகுமாரி இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றான். அவள் எனக்காகவே இறந்து போயிருக்கிறாள். அந்த குட்டரோகி மோசம் செய்து என்னை

பயமுறுத்தியதை நான் அறியாமல் ஓடிப் போனேனே என்று மனம் கலங்கியவனாய் அன்றிரவே அந்நகரில் அமைந்துள்ள அந்த திருவாசல் சாவடிக்கு வந்து விஷம் அருந்தி இறந்து போனான். பொழுது விடிந்ததும் அங்கு இருந்தவர்கள் யாரோ ஒரு பரதேசி இறந்ததாக எண்ணிக் கொண்டு, அரசகுமாரி தகனம் செய்யப்பட்ட இடத்தினருகே இவனையும் கொண்டு போய் தகனம் செய்தனர்.

அற்ப ஆயுளிலே இறந்துபோன அந்த இளவரசியும், இளவரசனும் தங்கள் ஆசைகள் நிறைவேறாமல் போனதால் ஆவேசம்[1] கொண்டு அந்தச் சாவடியில் இருந்து கொண்டு, அங்கு வருபவர்களை தங்கவிடாமல் பயமுறுத்திக் கொண்டு இருந்தன. இந்நிலையில் ஊரெங்கும் சுற்றி வந்த ஔவையார் அந்நகரத்திற்கு வந்தார். இரவு நேரம் வந்ததும் அங்கு இருந்தவர்களிடம் இரவைக் கழிக்க எனக்கு தங்குமிடம் ஏதும் உள்ளதா? என்று கேட்டார். அவர்கள் இந்நகரில் ஒரு சாவடி உள்ளது. நீங்கள் அங்கு சென்று தங்கிக்கொள்ளலாம். ஆனால் அந்தச் சாவடியில் ஒரு பிசாசு இருந்து கொண்டு, அங்கு தங்க வருபவர்களை கொன்று போடுகிறது. அதனாலே அங்கு செல்ல மக்கள் பயப்படுகின்றனர் என்றனர். இதுகேட்ட ஔவையார் நகைத்துவிட்டு பேயைப் பேய் அடிக்கப் போகிறதோவென்று சொல்லிக் கொண்டு அந்தச் சாவடியிலே வந்து படுத்துக்

1. ஆவேசம் – பேய்.

கொண்டார். வெளியிற் சென்றிருந்த பேயானது திரும்பிவந்து ஔவையார் படுத்திருப்பதைக் கண்டதும் மிகவும் ஆங்காரம் கொண்டு யெற்றென்று அறைய வருவதனைக் கண்ட ஔவையாரும் அநத்தல்[1] நீங்கி விழித்து அருளிச்செய்த,

வெண்பா

வெண்பாவிருக்காலிற் கல்லானை வெள்ளோலைக்
கண்பார்த்துக் கையாலெழுதானைப் - பெண்பாவி
பெற்றாளோ பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளோ
பெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று சொல்லக் கேட்டு, அது கல்வி கற்ற பேயானபடியினாலே இந்தக் கல்வியின் பொருளை அறிந்துகொண்டு, நம்முடைய பூர்வோத்திரம்[2] எல்லாம் அறிந்து சொன்ன இவள் தேவியே என்று பயந்து புறப்பட்டுச் சென்றது. பின் இரண்டாம் சாமத்தில் எற்றெற்று வந்தது, அப்பொழுதும் விழித்துப் பார்த்து ஔவையார்

எண்ணாயிரத்தாண்டு நீரிற்கிடந்தாலும்
உண்ணீரப்பெற்றாக் கிடையேபொற்-பெண்ணாவாய்
பொற்றொடிமாதர் புணர்முலைமேற்சாராரை
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று சொன்ன சொல்லைக் கேட்டு மிரண்டு போன பேயானது, பின்னும் மூன்றாம் சாமத்தில் எற்றெற்றெற்று வந்தது. அப்போதும் விழித்துப் பார்த்த ஔவையார்

---

1. அநத்தல்-தூக்கம். 2. பூர்வோத்திரம்-முற்பிறவி கதை.

வெண்பா

யானமுளதான் மழையுள்தான் மண்ணுலகிற்
றானமுளதாற்றகையுளதால் ஆனபொழு
தெய்த்தோ மிளைத்தோமென்றே மநந்திருப்போரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று சொல்லக் கேட்டு மீண்டுபோய் நாலாம் சாமத்திலும் எற்றெற்றெற்று வந்தது, அப்போதும் ஔவையார்

வெண்பா

கருங்குளவி குரைத்தூறிச் சங்கனி போல்
வருந்திரைக்கொன்றீயார் தன்வாழ்க்கை அரும்பகலே
இச்சித்திருந்தேபொருள் தாயத்தார் கொள்வாரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று சொன்ன உடனே இந்த நாலு சாமத்துக் கவியும் பார்த்து, இவருடைய ஆசி இருந்தால் கதிபெறலாம் என நினைத்து முன்பு இருந்த அரசகுமாரி வடிவம் கொண்டு ஔவையாரின் பாதத்தில் விழுந்து வணங்கி, கைகட்டி, வாய் புதைத்து நின்றபோது, ஔவையார் அவளைப் பார்த்து, நீ வாழ்ந்த விதத்தைக் கூறு என்று கேட்டார்.

அப்போது அந்த அரசகுமாரி என் பெயர் ஏலாங்குழலி என்பதாகும். நானும், என்னுடைய தோழிகளும் ஒருநாள் என் அரண்மனை உப்பரிகையின் மேலே பந்து அடித்து விளையாடிக் கொண்டிருந்த போது, வேறு நகரத்திலிருந்து எங்கள் நகருக்கு வந்திருந்த அரசகுமாரன் உப்பரிகையின் அருகே நின்று

கொண்டு என்னைப் பார்த்தான். நான் அவனைப் பார்த்தேன். ஒருவரை யொருவர் நோக்கியவுடன் நான் அவன் மீது காதல் கொண்டேன். காதல் கொண்டதனால், என் காதின் ஓலையை எடுத்து, கை நகத்தால் எழுதி அவன் முன்னே போட்டேன். அதனை எடுத்த அந்த அரசகுமாரன் எழுதப் படிக்கத் தெரியாதவனாய் இருந்ததால், இந்தச் சாவடியில் ஒரு குட்டரோகி இருந்தான், அவனிடத்திலே நான் எழுதிய அந்த ஓலையைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்டான்.

நயவஞ்சக எண்ணம் கொண்ட குட்டரோகி என்னை அடைவதற்கு, மனதிலே ஆசை கொண்டு, ஓலையில் நான் எழுதியிருந்த செய்தியினை மனதில் வைத்துக்கொண்டு, அரசகுமாரனைப் பயமுறுத்தும் படிச் செய்தி அவ்வோலையில் எழுதப்பட்டிருப் பதாகக் கூறி, அவனை அந்நகரினை விட்டு ஓடும்படிச் செய்து விட்டான்.

அவ்வாறு செய்த குட்டரோகியானவன் இந்தச் சாவடியின் மூலையில் படுத்துக் கொண்டிருந்தான். அரசகுமாரனைக் காண வந்த நான், ஆவல் மிகுதியால் படுத்துக்கொண்டிருந்த குட்டரோகியை அரசகுமாரன் என்று நினைத்து ஓடிச்சென்று கட்டி அணைத்து முத்தமிட்டேன். அப்பொழுதுதான் தெரிந்தது அவன் அரசகுமாரன் அல்லவென்று. அவன் வேடத்தைக் கண்டு ஏமாந்து அணைத்ததால், மிகுந்த அவமானமுற்று என் உயிரை விட்டேன் அம்மா என்று சொல்லியது.

இதனைக் கேட்ட ஔவையார் நல்லது இப்போது, பெண்ணே உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் எனக் கூறினார். இதைக் கேட்ட அரசகுமாரி நான் மீண்டும் மறுபிறவி எடுத்து நல்ல செல்வ வசதி கொண்டவளாயும், நான் விரும்பிய அரசகுமாரனே எனக்குக் கணவனாகவும், நான் அவன் மனைவியாகவும் இணைந்து சில காலம் கூடி வாழ்ந்திருந்து, பின் நற்கதியினை அடையும்படி எனக்கு வரம் அருள வேண்டும் என்று கூறி .மீண்டும் வணங்கி நின்றாள்.

ஔவையாரும் மகிழ்வுற்றுச் சொல்லுகிறார். நீ விரும்பிய அந்த அரசகுமாரனும், பின்னர் ஒருநாள் குட்டரோகி படித்துச் சொன்ன செய்தி தவறாக இருக்கும் என்று எண்ணி இந்தச் சாவடிக்கு வந்து விசாரித்து அறிந்ததில் நீ இறந்த செய்தி கேட்டு அவன் உனக்காக தானும் விஷம் அருந்தி இறந்து போய் விட்டான். இறந்த அவனும் பேயுருக்கொண்டு இங்கேதான் இருக்கின்றான் அம்மா என்று சொல்லி யதைக் கேட்ட பேயான அரசகுமாரன் ஔவையார் நம்மையும் அறிந்து சொல்லுகிறாளே இவர் ஈஸ்வரியேதான் என்று கூறிக்கொண்டு, தான் முன் இருந்த அரசகுமாரன் வடிவம் கொண்டு ஔவையார் காலிலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான்.

அப்போது ஔவையார் இவனுக்குத்தானே நீ ஆசைப்பட்டாய் என்று அரசகுமாரியிடம் கேட்டார். அப்பெண் ஆமாம் என்றாள். அதன்

பிறகு அவளுக்கு ஔவையார் அருளிச் செய்த விபரமாவது, உனக்கு பிரமதேவன் விதித்தது ஐம்பது வயது உண்டு. அதிலே பனிரெண்டு வயது வரை கன்னியாய் இருந்தாய். ஒரு ஆண்டு பேயாக இருந்தாய், ஆக உனக்கு பதின்மூன்று வயது சென்றுவிட்டது. இன்னமும் உனக்கு முப்பத்தேழு வயது மிச்சமிருக்கின்றது என்றார். மேலும் உனக்கு இருபத்தைந்து வயதளவும் கன்னி கழிய காரணமில்லை. ஆனபடியினாலே தெற்கே உறையூர் என்றொரு நகரம் உண்டு. அங்கே கரிகாற்சோழன் ஆட்சிசெய்து கொண்டு இருக்கிறான். அவனிடத்திலே ஆலாத்திப் பெண்கள்[1] பன்னீராயிரம் பெண்களுக்கு முதல்வி யான மரகதவடிவு என்னும் பெண் உண்டு. அந்த மரகதவடிவு வயிற்றிலே அழகே வடிவானப் பெண்ணாக நீ பிறக்கப் போகிறாய், நீ பிறந்த உடனே நகரம் எல்லாம் செண்பகப் பூ வாசனை மிகுந்து வீசுவதைக் கண்ட சோழ மன்னன் அதிசயமுற்று உனக்கு சண்பகவடிவு என்று பெயரிட்டழைப்பான். அப்பெயர் கொண்டு நீ வளர்ந்து வரும்பொழுது உன்னுடைய அழகு அதிசயத்தை கேள்விப்பட்டு, மகிழ்ச்சி அடைந்த சோழ மன்னனானவன் நீ பிறந்த பொழுது பிள்ளையும், பெண்ணும் பிறந்ததுண்டோ என்று விசாரிக்கும் போது பன்னீராயிரம் பெண் குழந்தைகள் பிறந்திருக்கிறது என்று சொல்லுவார்கள். அந்தப் பெண்களையும்,

---

1. ஆலாத்தி – ஆரத்தி.

உன்னையும் எடுத்துக் கொண்டு வரச்சொல்லி, லட்சணக்காரரை அழைப்பித்து லட்சணம் பார்க்கச் சொல்லியபொழுது, அவர்கள் அப்போது உன்னைப் பெற்ற தாய் மரகதவடிவியை அழைத்து உன்னை நன்றாக வளர்க்கச் சொல்லி கட்டளை யிட்டு, உன் ஐந்து வயதிலேயே பள்ளிக்கு அனுப்பி சகலவிதமான கல்வியினையும் கற்பித்து, ஏழு வயதிலேயே ஆடலும், பாடலும் கற்பித்துக் கொண்டு வருகின்ற வேளையில், நீ சிறந்த திறன் பெற்று அழகும் பெற்று வளர்ந்து வந்தாய்.

பன்னிரண்டு வயது அடைந்ததும் சோழ மன்னன் ஒருநாள் உன்னை அழைப்பித்து நீ கற்றிருக்கின்ற வித்தை, ஆடல் பாடல் எல்லாம் பார்ப்பான். தமிழில் வெகு திறமையாய் இருப்பாய். அது கண்டு மகிழ்வுற்ற மன்னன் இவள் தமிழுக்குரியவள் என்றும், இன்று முதற்கொண்டு சண்பகவடிவு என்கிற பெயர் வேண்டாமென்றும், அதனை மாற்றித் தமிழறியும் மடந்தை என்னும் பெயரினைக் கொடுப்பான்.

அப்போது சோழ மன்னனிடம் சொல்லிக் கொள்வாய், ஐயா என்னுடன் கவிப் பிரசங்கம் செய்து என்னிலும் தேர்ந்த கவி ஒருவனையேச் சேருவேன். அப்படித் தேறாதவர்களை தள்ளி விடுவேன். எப்படிப்பட்ட மன்னர் மண்டலீகர்[1] வந்தாலும், வந்தவர்களிடம் முதலில் ஆயிரம்

1. மண்டலீகர்–அரசர் (இருபது யோசனை விஸ்தார தேசத்தை ஆள்பவன்.)

பொன் வாங்கிக் கொண்டு, அதன் பிறகு ஒரு கவியைச் சொல்லி அந்த கவிக்குப் பொருள் சொல்ல வகையறியா விட்டால் அவனை அடித்து ஓட்டிவிட்டு உண்டு மகிழ்ந்திருப்பேன் என்று சொல்ல, அது கேட்டு மன்னனும் மகிழ்ந்து அப்படியே நீ புகழ் அடைந்திருந்தால் போதும் என்றான்.

மேலும், உனக்கு என்று ஒரு தனி அரண்மனையும், அந்த அரண்மனைக்கு ஏழு மாடி, அறுபத்து நான்கு வாசல், வாசலுக்கு வாசல் விநோதம் நிறைந்திருக்கும் வாசலும், கற்றுச் சொல்லிப் பெண்கள் இருக்கின்ற வாசலும், சூத்திரப் பதுமை இருக்கிற வாசலும், புலி இருக்கிற வாசலும், கரடி இருக்கிற வாசலும், யானை இருக்கிற வாசலும், குரங்கு இருக்கின்ற வாசலும், வேட்டை நாய்கள் இருக்கின்ற வாசலும், கிணறு இருக்கின்ற வாசலும், சந்தனக் கிணற்றிலே விழுந்தால் சூத்திரப் பலகை மேலே மூடிக் கொள்ளவும். அது கடந்து அப்புறம் போனால் குங்குமச் சேறிருக்கிற வாசலும், அந்தக் குங்குமச் சேற்றைக் கடந்தவன் கால் கழுவ ஆழாக்கு பனிநீர் வெள்ளித்தட்டில் அக்கரையிலே வைத்து இருக்கிறதும், சித்திர மண்டபங்களும், பாரதம், இராமாயணம், அரிச்சந்திரன் கதை, நளமகராஜன் கதை போன்ற விசித்திரங்கள் எழுதியிருக்கிற மண்டபங்களும், நீராழி மண்டபமும், பளிங்கு மாமண்டபமும், தமிழறியும் மண்டபமும், இயலறி மண்டபமும், இசையறி மண்டபமும்,

கூத்துப் பார்க்கின்ற மண்டபமும் இவைகள் எல்லாம் அமைப்பித்து, இதற்கப்பால் கோழி யுடனே சேவலைக் குத்து விடுகிற வாசலும், ஆட்டுக்கடாக்களைப் பாய்ச்சலுக்கு விடுகிற வாசலும், நாடக சாலை வாசலும், அப்பால் நடுமத்தியிலே வெகு அலங்காரம் செய்யப்பெற்ற கச்சேரி மண்டபமும், அதன் மத்தியிலே களிற்றி யானைத்[1] தந்தக் கட்டிலும், பெட்டை யானைத் தந்தக் கட்டிலும் தூங்கும் மஞ்சமாகச் சோடித்து அந்தக் கட்டிலை கால்மாடு தலைமாடு தெரியாதபடி பாவனையாகப் போட்டு வித்துத் தலைமாட்டிலே நிலைக்கண்ணாடியும், கால் மாட்டிலே சூத்திரப் பதுமைகளும் அமையும்படிச் செய்து, அந்தக் கட்டிலில் கால்மாடு தலைமாடு அறிந்து படுத்துக் கொண்டால் அந்தப் பதுமைகளில் ஒன்று கால் பிடிக்கவும், ஒன்று கைப் பிடிக்கவும், ஒன்று விசிறி எடுத்து விசிறவும், சிறிது பாக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கவும், சிறிது தம்பலப்படிக்க மேந்தவும்[2] இப்படி அநேக காலம் பண்ணிக் கொண்டிருக்கும்.

ஒருவேளை வகையறியாமல் வந்து கால் மாட்டிலே தலை வைத்துப் படுத்துக் கொண்டால் அந்த சூத்திரப் பதுமைகளில் ஒன்று தலையை வளைத்துப் பிடிக்கும், ஒன்று மூத்திரம் பேயும், ஒன்று தலையைச் சிறைக்கும், ஒன்று சாணி

---

1. களிறு – ஆண் யானை.

2. தம்பலப்படிக்க – தாம்பூல எச்சில் துப்பும் பாத்திரம்.

எடுத்துக் கொண்டு தலைமீதில் வைக்கும், ஒன்று விளக்கேற்றி வைக்கும் இது போன்ற வேண்டிய விசுடங்கள் எல்லாம் செய்து வைத்து உனக்கு பச்சை பல்லக்கும் கட்டளையிட்டு, நீ பிறந்த போது பிறந்த பன்னீராயிரம் பெண்களையும் உனக்குச் சேவிக்கத் தக்கதாகக் கட்டளை இட்டு, ரதகஜதுரகபதாதிகளையும் நியமித்து, இவைகள் எல்லாம் உனக்குச் சரிசமானமாக இருக்கப்பட்ட தோழிமார்களில் இயலறியும் மடந்தை என்றும், இசையறியும் மடந்தை என்றும் இரண்டு பேர் உண்டு. அவர்களோடு நீயும் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஆடல் பாடல் மேளதாளங்கள் முழங்க வெகு ஆடம்பரத்துடனே காலைப் பொழுதிலும், நல்ல மத்தியான காலத்திலும், சாயங்காலத்திலும் மூன்று நேரமும் சோழ மன்னன் கொலுவீற்றிற்குப் போய் ஆடல் பாடல் முதலியவைகளைச் செய்து திரும்பும்படி கட்டளை செய்து, பகலுக்கும், இரவிற்கும் பொழுது போகும்படியான கதைகளைக் கேட்கவும், சகல வேத புராணங்கள் எல்லாம் கேட்கவும், அரதேசி[1], பரதேசிகளுக்கு[2] அன்னம் பறிமாறவும், அஞ்சான மாறவும்[3], போசனம்[4] பண்ணவும், ஆடை ஆபரணம் தரிக்கவும், கேளிக்கை பார்க்கவும், பளிங்கு மாமண்டபத்தில் ஒரு சாமம் நித்திரை பண்ணவும் இதுபோன்ற அனைத்துவித ஆடம்

---

1. அரதேசி-உள்நாட்டைச் சேர்ந்த யாசகன் (அகதேசி, அரதேசி என மருவியது), 2. பரதேசி-பலநாடுகள் சுற்றுபவன். 3. அஞ்சான மாறவும்-அறிவு புகட்டவும். 4.போசனம் - உணவு, புசித்தல்.

பரங்களும் பொருந்தி இருக்கத் தக்கதாக சோழ மன்னனானவர் செய்து கொடுப்பார்.

அதன்படி இந்த முப்பத்தெட்டு வயதளவும் நீ கன்னி கழியாமல் வெகு போகசாலியாய் இருப்பாய். அதே காலகட்டத்தில் அரச குமாரனும் அந்நகரத்திலே ஒரு விறகு தலையன் மனைவி வயிற்றிலே பிறந்து வளர்ந்து பெரியவனாகி விறகு விற்று வயிறு பிழைத்துக் கொண்டு திரிவான். இப்படியிருக்கிற காலத்தில் ஒருநாள் அதிகாலையில் கடைத்தெருவில் விறகுச் சுமை யினை சார்த்தி வைத்துவிட்டு அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பான். அந்த நேரத்தில் நீ உன் தோழிமார்களுடன் சோழ மாமன்னன் அரண்மனை சென்று ஆடல் பாடல் செய்து முடித்து வெகு ஆடம்பரத்துடன் திரும்பி அத்தெருவின் வழியாக வருவாய். அப்போது அந்த விறகு தலையன் நீ வருகின்றதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பான். நீயும் அவனைப் பார்ப்பாய்.

ஒருவருக்கொருவர் பார்த்த உடனே நீ உன் பக்கத்தில் இருந்த தோழிகளை அழைத்து அதோ அந்தக் கடையில் இருக்கிறவனைப் பாருங்கள் பாசி படிந்த பல்லும், பூத முகமும், வெந்த வீட்டுக் கழிமரம் போன்று காலும் கையும், அரையிற் சுற்றிய கொடியும் அதிலே சொருகிய அரிவாளும் உடையவனாக இருக்கிறான். இப்படியும் ஒருவன் உலகத்தில் இருப்பானோ? இவ்வளவு அவலட்சணத்தோடு

இருக்கின்றவனையும் ஒரு பெண் பிள்ளை சேருவாளோ? என்று கேட்பாய். அப்போது தோழி ஏனம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள் ஊசியும் கூட ஒரு நூலைக் கோர்த்துக்கொண்டு இருக்கிறது. அதனால் இவனுக்கும் உலகத்தில் ஒருத்தி இருப்பாள் என்று சொல்லுவாள். அதைக் கேட்ட நீயும் அவனைப் பார்த்துக் காறி உமிழ்வாய்.

அதனை அந்த விறகு தலையன் கண்டான். ஒரு பெண்ணான இவள் நம்மைப் பார்த்துக் காறி உமிழ வேண்டிய காரணம் என்ன? ஆண் மகன் நான் எப்படி இருந்தால் என்ன? இருக்கட்டும் எப்படியாகிலும் ஆயிரம் பொன் சேகரித்துக் கொண்டுபோய் இவளிடத்திலே கொடுத்து நான் இவளைச் சேராமல் போவேனாகில் நான் ஆண் மகன் அல்ல என்று சபதம் செய்து கொண்டான்.

தன் வீடு சென்ற அவன் தகுந்தவர்களிடத்தில் தன் குறையைச் சொல்லி ஆயிரம் பொன் பெற்றுக் கொண்டு, அவள் இருந்த அரண்மனைக்கு வந்தான். அப்படி வந்தவன் வைத்திருந்த ஆயிரம் பொன்னையும் நீ வாங்கிக் கொண்டு, பிறகு ஒரு கவியைச் சொல்லுவாய் அந்தக் கவிக்குப் பொருள் அறியாமல் அவன் விழிப்பான். அப்போது அடித்து ஓட்டி விடுவாய். அந்நகரில் அவனுக்கு முன் வந்து உன் கையில் அடிபட்டு போனவர்கள் இருப்பார்கள் அல்லவா? அவர்கள் இடத்திலே போய் முறையிடுவான். அதற்கு அவர்கள் அடே

பைத்தியக்காரா நீ ஐந்தாயிரம் பொன்னல்ல, பதினாயிரம் பொன் கொடுத்தாலும் உன் காரியம் ஆகப் போவதில்லை. அவளுடன் கவி சொல்லி யுத்தப் பிரசங்கம் செய்து மடக்கினவர்கள் இங்கு ஒருவரும் இல்லை. அவளை வெல்வதற்கு எவராலும் முடியாது. ஆகையால் கவி சொல்லி அவளை வெல்வாயானால் மாத்திரம் மட்டுமே நீ நினைத்தது நடக்கும். வேறு வழியில் அவளை அடையமுடியாது என்றனர்.

நீ உண்மையில் திறன்மிக்கவனாய் இருந்தால் பாண்டிய மன்னன் ஆட்சி செய்யும் மதுரை நகரில் தமிழ்ச் சங்கத்தார் நாற்பத்தொன்பது பேர் இருக்கின் றார்கள். அவர்களிடத்தில் போய் முறையிட்டுக் கொண்டால், ஒருவேளை அவர்கள் வந்து அவளுடன் தர்க்கம் செய்து வெற்றி பெறுவார்கள், இல்லா விட்டால் இங்கே யாரும் அவளுக்கு எதிராளி இல்லை. ஆதலால் அங்கு செல்வாயாக என்று சொல்லுவார்கள். உடனே அந்த விறகு தலையனும் மதுரைக்குச் சென்று சங்கத்தாரிடையே முறையிட்டான்.

அவன் முறையிட்டதைக் கேட்ட நக்கீரர் உன் அரண்மனை வந்து ராத்திரி பொழுதெல்லாம் விவாதித்து உன்னை தோற்கச் செய்து, தமிழறியும் மடந்தை எனும் பெயரை மாற்றி வைத்து, அதன் பிறகு அந்த விறகு தலையனுக்கு உன்னை மணம் முடித்துச் செல்வார். அப்பால் உனக்குப் பின்னையும் ஆயுள் பன்னிரண்டு வயது உண்டு.

அந்தப் பன்னிரண்டு ஆண்டும் நீங்கள் இருவரும் கூடி மகிழ்ந்து வாழ்ந்திருந்து பின் நற்கதி யடைவீர்கள் போங்கள் என்று ஔவையார் வரம் கொடுத்தாள். அதுகேட்டு இரண்டு பேய்களும் நெடுஞ்சாண்கிடையாக ஔவையார் காலில் விழுந்து வணங்கிச் சென்றன. பின் ஔவையாரும் தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

இதன்பின்னர் பெண் பேயானவள் உறையூரில் மரகத வடிவு வயிற்றில் பிறந்தனள். ஆண் பேயானவன் அந்நகரில் விறகு தலையன் மகனாகப் பிறந்தனன். இவள் தமிழறி மடந்தை என்னும் பெயர் கொண்டு, முன்னர் ஔவையார் வரம் கூறியதுபோல் சோழ மாமன்னனால் சகல வசதிகளும், நன்மைகளும் பெற்று, வாழ்ந்து வருகின்ற காலத்தில் ஒரு நாள் பச்சை பல்லக்கின் மீது ஏறிக்கொண்டு பனிரெண்டாயிரம் பெண்களும் தொழுதுவர, பகலில் பந்தம் பிடிக்க, வெண்சாமரம் வீச தோழிமார்கள் இரண்டு பக்கத்திலும் தாவிக்கொண்டு வர கட்டியக்காரர் கட்டியங்கூறி எச்சரிக்கை செய்ய, பதினெட்டு மேள வாத்தியங்கள் முழங்க, தும்புரு வீணை, கின்னரி, இராவணாஸ்திரம், குடமுழா போன்ற பலவித சங்கீதம் முழங்கிவர, மிகவும் அழகு நிரம்பிய அவள் பவனி வருவதைக் கண்ட இளைஞர்கள் எல்லாம் மூர்ச்சையாய் விழுந்திட சோழ மாமன்னன் கொலுவிற்குச் சென்று அங்கே அவர் முகம்[1] பெற்றுத் திரும்பி வருகின்றாள்.

1. முகமன் – உபசாரம். (முகமன் என்பது முகம் என்று மருவியது)

அப்பொழுது அந்த விறகு தலையனைக் கடைத் தெருவில் கண்டு, அவனையும் ஒரு பெண் பிள்ளை சேருவாளோ என்று காறி உமிழ்கின்றாள். அதனைக் கண்ட அந்த விறகு தலையன் இது என்னடா கூத்து, நன்றாயிருக்கிறதே இவள் சோழ மாமன்னன் வெள்ளாட்டிப் பெண்தானே, நாம் ஆண் மகன் அல்லவோ, நம்மைப் பார்த்துக் காறி உமிழக் காரணம் என்னவோ? இவளுக்கு இத்தனை கர்வம் எப்படி வந்தது என்று கோபம் கொண்டான்.

எனக்கு தெய்வ அருள் இல்லாமலாப் போகப் போகிறது. எப்படியும் ஆயிரம் பொன்னை சேகரித்துக் கொண்டு இவளை அடையாமல் விடுவதில்லை என்று சபதம் செய்துகொண்டான். அதனால் வீட்டிற்குப் போகாமல் நேரே விறகு வெட்டுதற்காகக் காட்டிற்குச் சென்றான்.

காட்டிற்குச் சென்ற அவன் விறகு வெட்டிக் கொண்டிருக்கும் பொழுது வெயிலின் உக்கிரம் அதிகமானதால் சிறிது களைப்பாறலாம் என்று எண்ணி, அங்கிருந்த ஒரு மாமரத்தின் நிழலில் சென்று படுத்துச் சிறிது நேரம் களைப்பாறினான். அப்போது அம்மாமரத்தில் ஒரு பழம் பழுத்திருப்பதைக் கண்டு, அப்பழத்தை அறுத்து வீட்டிற்குப் போகும் பொழுது சாப்பிடலாம் என்று நினைத்து மடியில் வைத்துக் கட்டிக்கொண்டான். பின் வெயில் கொஞ்சம் தாழ்ந்ததும் விறகு வெட்டுவதற்காகக் கிளம்பிச் சென்றான்.

விறகு தலையன் இளைப்பாறிய அந்த மாமரம் ஓர் அதிசயமும், அற்புதமும் நிறைந்த மரமாகும். இந்த மரத்தில் ஒரே ஒரு பழம் மட்டுமே ஆண்டிற்கு ஒருமுறை காய்த்துப் பழுத்து நிற்கும். அந்த ஒரு பழத்தைப் பறித்து உண்ணு வதற்காகவே ஒவ்வோர் ஆண்டும் ஒரு முனிவர் அங்கு வந்து செல்வார் அவரைத் தவிர வேறு யாரும் அந்த மாமரத்திலிருக்கும் மாம்பழத்தைப் பறித்து உண்ணுவதில்லை. எப்போதும் போல அன்றும் அந்த முனிவர் மாம்பழம் உண்ண எண்ணி அந்த மரத்தினடி வந்து சேர்ந்தார்.

வந்த முனிவர் மரத்தில் பழம் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியுற்றார். தன்னைத் தவிர வேறு யாரும் இப்பழத்தைப் பறித்து உண்ண மாட்டார்களே என்று எண்ணியவராய் சுற்றும் முற்றும் பார்த்தார். அப்போது அங்கே காட்டில் விறகு வெட்டும் சத்தம் கேட்டு அங்கே சென்று விறகு தலையனிடம் விசாரிக்கலானார்.

அவனும் மாம்பழத்தை மறைத்து வைத்துக் கொண்டு இல்லை என்று சொன்னால் முனிவர் ஏதேனும் சாபமிட்டு விட்டால் என்னாவது என்று நினைத்து நான்தான் ஐயா அப்பழத்தை பறித்து வைத்துள்ளேன் இந்தாருங்கள் என்று அவரிடம் பழத்தைக் கொடுத்தான்.

முனிவர் மிகவும் மகிழ்வுற்று, பழத்தைச் சாப்பிடாமல் வைத்திருந்து, நான் கேட்டதும் இல்லை என்று சொல்லாமல் உடனே

கொடுத்துவிட்டான். அதனால் இவனுக்கு ஒரு வரம் கொடுப்போம் என்று கருதி, அவனை அருகே அழைத்து, இங்கே இருக்கின்ற மரங்கள் எல்லாம் சந்தன மரங்களாகக் கடவது என்று வரம் அளித்தார். இந்த மரங்களை எல்லாம் வெட்டி விற்று நீ பெரும் பணக்காரனாக, இந்த ஊருக்கே இராஜாவாகப் போகிறாய் என்று கூறிச்சென்றார்.

பின் அந்த விறகு தலையன் சந்தன மரங்களை வெட்டிக் கட்டை கட்டையாகத் தறித்துச் சுமை கட்டிக்கொண்டு அந்த நகரத்திலே போய், அங்கு வாழ்ந்து வந்த குடிபடைகள், துராதுரைகள், பதாதிகள், மந்திரி பிரதானி, பிராமணர், வர்த்தகர் மற்றும் உள்ளவர்களுக்கு எல்லாம் வீட்டுக்கு வீடு தவறாமல் ஒரு கட்டு விறகு, ஒரு சந்தனக் கட்டையுமாகப் போட்டு வந்தான். முன்பெல்லாம் விறகு விற்ற பணத்தைக் கொண்டு அன்றாட வாழ்வை ஓட்டிவந்த அவன், முன்பு செய்ததை போல் இப்போது செய்யாது தமிழறியும் மடந்தைக்காக ஆயிரம் பொன் சேமிக்க வேண்டி, பிச்சை எடுத்து வயிறு வளர்க்கலானான். யாரும் விறகு கேட்டாலும், கேட்காவிட்டாலும் அவர்கள் வீட்டிற்குப் போய் விறகுக் கட்டும், சந்தனக்கட்டையும் போட்டு வருவான். கூலி பெற்றுப்போ என்று யாராவது அழைத்தாலும், பிறகு வாங்கிக் கொள்கிறேன் என்று கூறிச் சென்றான்.

இப்படியாக நாட்கள் பல சென்று கொண்டிருக் கையில், ஒருநாள் அந்த நகரிலே

இருநத பெரிய செட்டியார் வீட்டில், செட்டியாரின் வெள்ளாட்டி யானவள், உணவு சமைக்க வேண்டி விறகு என்று நினைத்து சந்தனக்கட்டையை அடுப்பில் வைத்து எரிக்க, எரிகின்ற சந்தனக்கட்டையில் இருந்து உண்டான மணம் கமகமவென்று நகரெங்கும் பரவியது. அது கண்ட செட்டியாரும் மளிகைக் கடையிலிருந்து ஓடிவந்து தன் வீட்டு அடுப்பங்கரைக்குச் சென்று அடுப்பிலே என்னத்தைப் போட்டு எரிக்கிறீர்கள், சந்தன மணம் வீசுகின்றதே என்று கேட்டார்.

அதற்கு வெள்ளாட்டியானவள் நான் யாரென்று சொல்ல, யாரோ ஒருவன் வெட்டியான் போல இருக்கின்றான் அவன் நாள்தோறும் ஒருசுமை விறகு கொண்டு வந்து போட்டு விட்டுப் போவான் அவையெல்லாம் நம் வீட்டின் ஒரு மூலையில் இருக்கின்றன. அவற்றில் விறகென்று நினைத்து ஒரு கட்டையை எடுத்து அடுப்பிலே வைத்தேன் இதுதான் நடந்தது.

அதுவுமல்லாது, அவன் முன்பெல்லாம் விறகு கொண்டுவந்து போட்டுவிட்டு அன்றைக்கு உண்டான கூலியினைப் பெற்றுச் செல்வது வழக்கம். இப்போது என்னவோ தெரியவில்லை விறகை மட்டும் போட்டு விட்டு கூலி வாங்காமல் சென்று விடுகிறான். நாங்கள் அவனை அழைத்துக் கூலியினைப் பெற்றுச் செல் என்று கூறினால், எனக்குத் தேவைப்படும் பொழுது பெற்றுக் கொள்கிறேன் உங்களுக்கு என்ன என்று சும்மாவே

போகின்றான். இப்படியாக அவன் கூலி பெறாமல் செல்வது இன்றோடு நாற்பது நாட்க ளாகிற்து. அவனுக்கு என்னமோ, ஏதோ என்று கூறினாள்.

அது கேட்ட செட்டியார் விறகு வெட்டி கூலி வாங்கி சாப்பிடுகிறவன் கூலி வாங்காமல் விறகினைப் போட்டுச் செல்வது என்னவோ, விநோதமாக அல்லவா உள்ளது. எனவே இதனை விசாரித்து அறிய வேண்டும் ஆதலால் நாளை அவன் விறகுக்கட்டைப் போட நம் வீட்டிற்கு வரும்பொழுது அவனை என்னிடம் அழைத்துவா என்று கூறி, தன் வீட்டில் கொண்டு வந்து அவன் போட்டிருந்த சந்தனக் கட்டைகளைப் பார்த்து மகிழ்ச்சி பெற்றவராய் மளிகைக் கடைக்குச் சென்றார்.

மறுநாள் காலையிலே வந்து அவன் விறகு போட்டுப் போகிறபோது அதைக் கண்டு செட்டியார் வீட்டுத் தாதி விறகு தலையனை அழைத்துக் கொண்டு போய் செட்டியார் முன் விட்டாள். செட்டியார் விறகு தலையனைப் பார்த்து நீ யார் பிள்ளை என்று கேட்க, ஐயா நான் பரதேசி விறகு விற்கிறவன் என்று பதில் சொன்னான். நீ விறகு விற்று வயிறு வளர்ப்பவ னாகில், கூலி பெறாமல் சும்மா செல்கின்றாயே? அதன் காரணம்தான் என்ன என்று கேட்டார்.

விறகு தலையனும் ஐயா எனக்கு ஆக வேண்டிய காரியம் ஒன்றுண்டு அந்தக்

காரியத்தை நீங்கள் செவ்வைப் படுத்திக் கொடுப்பீர்கள் என்று நம்பி கூலி வாங்காமல் சும்மாப் போகிறேன் என்றான். அந்தக் காரியம் என்னவென்றார் செட்டியார் அதனை அவரிடத்தில் சொல்ல வெட்கப்பட்டு நின்றான் அவன்.

செட்டியார் நல்லவரானதால் விறகு தலையனை கிட்ட அழைத்து பயப்படாமல் சொல்லு பிள்ளாய் என்றார். அப்போது விறகு தலையன் சொன்னான் ஐயா, நான் ஒருநாள் கடைத்தெருவில் விறகுச் சுமையினைச் சார்த்தி வைத்து விட்டு நின்று கொண்டிருக்கையில், தமிழறி மடந்தை தன் தோழிமார்களுடன் வெகு உல்லாசத்துடனே சோழ மாமன்னன் கொலு விற்குச் சென்றுவிட்டு தன் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த என்னைப் பார்த்து தன் தோழிகளிடத்திலே இப்படியும் ஒருவன் இருப்பானோ, இவனையும் ஒரு பெண் பிள்ளை சேருவாளோ எனக் கேலியாகப் பேசிச் சிரித்தாள். அவளுடைய தோழியர் அவனுக்கும் இந்த உலகத்தில் ஒரு பெண் நிச்சயம் இருப்பாள் என்று கூறினர்.

தோழியர் கூறியதைக் கண்டு தமிழறியும் மடந்தை என்னைப் பார்த்துக் காரியுமிழ்ந்தாள். அதனைப் பார்த்த நான், இவள் நம்மைப் பார்த்துக்

காரி உமிழ்வதன் காரணம் தான் என்ன, நாம் ஆண் பிள்ளை எப்படி இருந்தால் என்ன, இப்படிப் பட்டவளையே அடைய வேண்டுமென நினைத்து ஆயிரம் பொன்னுக்கு வழியில்லாதபடியினாலே, அதனை சேகரிக்க வேண்டியே இப்படி வேலை செய்து கொண்டிருக்கிறேன் ஐயா என்றான்.

இதைக் கேட்ட அந்தச் செட்டியார் வயிறு குலுங்கச் சிரித்தார். இவன் இருக்கிற வேடம் என்ன இவனுடைய ஆசையைப் பார். மன்னாதி மன்னர்கள் எல்லாம் அவளை அடைய விரும்பி வந்து அடிபட்டுப் போகிறார்கள். அப்படி இருக்கையில் இவன் அவள் அரண்மனைக்குச் செல்வதாவது, ஆனாலுமென்ன இவன் அதிர்ஷ்ட அனுகூலம் எப்படியோ அது நமக்குத் தெரியாது. நாம் ஏன் இதை தடை செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணியவராய், விறகு தலையனை நோக்கி நீ இங்கேயே இருப்பா. நான் உனக்குப் பொன் தருகிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்று முன்னர் அவன் போட்டிருந்த சந்தனக்கட்டைகளை எல்லாம் பார்த்து அவைகளை விலை மதிப்பிடும்போது பதினாயிரம் பொன்னிற்கு அதிகமாக இருந்தபடியினாலே மகிழ்ச்சி அடைந்த செட்டியார் விறகு தலையனை அழைத்து இன்னும் எங்கெல்லாம் விறகு போட்டிருக்கிறாய் என்று கேட்க அவன் வீட்டிற்கு வீடு தப்பாமல் போட்டிருப்பதாகச் சொன்னான்.

நல்லதென்று சொன்ன செட்டியாரும், இவனிடம் விறகு பெற்றுக்கொண்டவர்களை எல்லாம் ஓரிடத்தில் அழைப்பித்து அவர்களோடு கலந்து பேசி முடிவு செய்து இந்த விறகு தலையனை இராஜ வடிவாக்கி பின், வெகு ஆடம்பரத்துடனே அவள் அரண்மனைக்கு அனுப்பிவைப்பதென முடிவு செய்தனர்.

அதன்படி நாவிதனை வரவழைத்து விறகு தலையனுக்குப் பணி செய்து, சம்பங்கி எண்ணை இட்டு தலை முழுகப்படுத்தி கடுக்கன், மோதிரம், சரப்பளி, வெள்ளி அரைஞாண் மற்றுமுண்டான ஆபரணங் களும் பூட்டி, பச்சைவடத் தோவத்திக்[1] கட்டி பாகை சாலுவை அங்கி நிசாருநடுக்கட்டி இவைகள் எல்லாம் தரிப்பித்து திவ்வியமான உணவழித்து களபகஸ்தூரி பரிமளாதிகளும் அணியச் செய்து பாக்கு வெற்றிலையும் கொடுத்து, எக்காளம், மேள பேரிகை பூரிகை[2] முதலான பதினெட்டுவகை மேள வாத்தியங்களும் முழங்கும்படி செய்துவித்து, விறகு தலையனை மன்மதன் போன்ற வடிவாக்கி பச்சை பல்லக்கில் அமரவைத்து, ஆயிரம் பொன் முடிப்பு கட்டித் தண்டிகையில்[3] வைத்து, இரதகஜதுரக பதாதிகள் புடைசூழ, பெண்கள் சிலர் முன்னே ஆடிக் கொண்டு வர, அடப்பக்காரன் வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்து வர இதுபோல் வெகு ஆடம்பரமும் அலங்காரமும் செய்து நகரத்துப் பெரிய செட்டியாரும் மற்றவர்களும், ஓகோ!

1. தோவத்தி – வேட்டி, 2. பூரிகை – ஊதுகுழல், 3. தண்டிகை – பல்லக்கு

இராஜாவே தமிழறியும் மடந்தையிடத்துப் போய் வாருங்கள் என்று கூறி வழியனுப்பி வைத்தனர்.

பிறகு தலையனான இராஜாவும் தமிழறியும் மடந்தையின் அரண்மனைக்குப் போகின்றபோது மேள வாத்தியங்களின் ஒலி நகரெங்கும் அதிர்ந்து போகத் தக்கதாய் முழங்குவித்தான். அது கண்டு இது ஏதோ தெரியவில்லை எப்போதும் போல் இருக்க வில்லையே, இன்றைக்கு மேளவாத்தியம் வெகு வாயடிப்பட்டு வருகிறது. இவன் எந்த தேசத்து மன்னனோ தெரியாதென்று ஆச்சரியப்பட்டு தமிழறியும் மடந்தையும், தோழியர்களும் உப்பரி கையின் மேலேறி அங்கு இருந்தபடியே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின் தாசிகள், மொண்ணச்சிகள்[1], கற்றுச் சொல்லிப் பெண்கள்[2] இவர்களை அழைத்து, அந்த இராஜா நம்முடைய தலைவாசல் வந்து இறங்கி விசுவாசங் கொடுத்தால் வாங்கி வாருங்கள் என்று சொல்லி உப்பரிகையினை விட்டிறங்கி தோழியர்களுடன் தான் இருக்குமிடம் சென்றாள்.

பிறகு தலையனான இராஜாவும் ஜெயஜெய மென்று மிகுந்த ஆடம்பரத்துடன் தமிழறியும் மடந்தையின் வாசலில் வந்திறங்கினான். சிறிது நேரம் சென்றதும் தன்னுடன் கூட வந்தவர்களை எல்லாம் அனுப்பி விட்டு, அடப்பக்காரனை

1. மொண்ணச்சிகள் – திருநங்கைகளாக இருக்கலாம்,

2 . கற்றுச் சொல்லிப் பெண்கள் – ஏட்டைப் படித்துச் சொல்பவர்கள்.

மட்டும் உடன் இருக்கும்படிச் செய்தான். அப்போது மொண் ணச்சிகள், கற்றுச் சொல்லிகள் அவனருகில் வந்து இராஜவே நீர் எந்த தேசத்து ராஜா என்று கேட்டனர். அதற்கு விறகு தலையன் உண்மையில் நாம் இராஜா அல்லவே. இவர் களுடன் ஏதாவது பேசி மோசம் வந்துவிடப் போகிறது என்று மனத்துள் நினைத்துக் கொண்டு, எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

என்ன இவன் வாயைத் திறந்து பேசாமல் இருக்கிறானே? மீண்டும் இவனைப் பார்த்து பழமொழியோ என்றார்கள். அதற்கும் பதில் பேசாமல் அமைதியாகவே இருந்தான். மீண்டும் நீர் என்ன நிறை குடமோ அல்லது குறைகுடமோ என்றார்கள். அதற்கும் அவன் அமைதியாகவே இருந்தான். மீண்டும் ஊமையோ, செவிடோ என்றார்கள் அதற்கும் பதில் கூறாமல் இவன் அமைதியாய் இருந்தபடியால், மொண்ணச்சியர் எண்ணிக்கொண்டனர். இவன் நம்மிடத்திலே பேச விரும்பவில்லை போலும், தலைமையாயிருக்கிற தமிழறியும் மடந்தையிடம் பேசிக் கொள்வோம் என நினைக்கின்றான் என்று எண்ணினர். அவன் பேச வகையறியாமல் இருக்கிறான் என்ற உண்மை அறியாததால்.

பிறகு இராஜாவே நீங்கள் எங்களுடன் பேசா விட்டால் பரவாயில்லை. இப்போது இங்கு யாருக்கு விசுவாசம் கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்றனர். அப்போது தான் விறகு தலையன் வாயினைத் திறந்து உங்கள் நாச்சியாருக்குக்

கொண்டுவந்தேன் அவளுக்குப் பரியம்[1] என்ன வென்று கேட்டான். அதற்கு அவர்கள் ஆயிரம் பொன் பரியம் என்று சொன்னார்கள். நல்லதென்று சொல்லியவாறே தண்டிகை யிலிருந்த ஆயிரம் பொன் முடிப்பை எடுத்துக் கொடுத்தான்.

பொன் முடிப்பைப் பெற்ற அவர்கள் அதனை தமிழறி மடந்தை முன்னே கொண்டு வந்து வைத்து விட்டு, தாங்கள் அவனிடம் நான்கு கேள்விகள் கேட்டதும், அவன் அவை எவற்றுக்கும் பதில் கூறாமல் அமைதியாக இருந்ததையும், பின்னர் கேட்ட கேள்விக்கு பொன் கொடுத்ததையும் சொன்னார்கள். இதனைக் கேட்ட தலைவி அவன் மூடன் என்பதை அறிந்தாள். பின் தாதிகளை அழைத்து பொன்னை எடுத்துக் கொண்டு போய் பண நோட்டம் பார்க்கிற பெண் கையில் கொடுத்து சரிபார்த்துவிட்டு, பொன்னைப் பொக்கிஷப் பெட்டியில் வைத்துவிட்டு, அந்த இராஜாவை தெருத் திண்ணையில் இருக்கச் சொல்லி அனுப்பினாள். தாதிகளும் அப்படியே பொன்னைப் பார்வையிடுவித்துப் பொக்கிஷப் பெட்டியில் சேர்த்துவிட்டு, இராஜாவைத் தெருத் திண்ணையில் இருக்கச் சொல்லிச் சென்றனர். சிறிது நேரம் சென்றதும் அந்த இராஜாவை கூத்துப் பார்க்கிற மண்டபத்திற்கு அழைத்து வரச்சொல்லி அனுப்பினாள்.

---

1. பரியம் – பரிசம்

அப்படி அவர்கள் அவனை அழைத்து வரும் பொழுது விறகு தலையனான இராஜாவும் இரண்டாம் கட்டைக் கடந்து வருகின்றபோது அங்கேயிருந்த ஓவியங்களையும், மொண்ணச்சி களையும் கண்டு மோகம் கொண்டு, கண்களை இமைக்காமல் பார்த்து மயங்கி நின்றான். மறுநாள் பொழுது விடிந்த பொழுது அந்த இடத்தை விட்டு, அடுத்த கட்டிற்கு அவன் புறப்பட்ட போது தாதிப் பெண்கள் ஓடோடி வந்து அடேமூடா மோசம் போனாயே, பொழுது விடிந்து போயிற்றே இனி உனக்கு அடுத்துச் செல்ல வழியே இல்லை என்று கோபத்தோடு பேசி பிடரியிலே குத்தி, பழைய முறத்தால் அடித்து, குப்புறத் தள்ளி ஓட்டிவிட்டார்கள்.

ஆயிரம் பொன் வாங்கிக் கொண்டு அடித்து விரட்டுகின்ற மொண்ணச்சிகளைப் பார்த்து அந்த விறகு தலையன் இதென்ன புதுமையாக இருக்கின்றது என்று பலவாறு கூறி புலம்பினான். இவன் யாரோ நமக்குத் தெரியாது ஐயோ பாவம், என்று அவனை திரும்பவும் அழைத்து எதற்காக புலம்புகின்றாய் என்றனர்.

அதற்கு விறகு தலையன் சொல்கிறான், எனக்கு ஒப்பச் சொல்லி உடன்படத் தேவை யில்லையோ, சும்மா அடித்து ஓட்டிவிட்டால் பொருளினை இழந்த நான் புலம்பாமல் என்ன செய்வேன் என்றான். அதற்கு மொண்ணச்சிகள் உன் கையில் பொன் வாங்கிக் கொண்டதால்

ஒப்பச் சொல்ல வேண்டியுள்ளது எங்களின் கடமைதான், அதனால் நான் இப்பொழுது உனக்கு ஒரு கவி சொல்லுகிறேன்,அதற்குப் பதில் சொல் பார்ப்போம் என்று கூறி, அவர்களில் ஒருத்தி ஒரு கவி சொன்னாள்.

அவள் சொல்லிய அந்தக் கவியைக் கேட்ட விறகு தலையன் அதன் பொருள் ஒன்றும் புரியாது பேந்த பேந்த விழித்துக்கொண்டு நின்றான். அதுகண்டு அவர்கள் முன்னர் அடித்தது பொய், இனிமேல் அடிப்பதுதான் மெய் என்று கூறி பழைய முறத்தாலும், பழைய துடைப்பக் கட்டையாலும் அடித்து, கழுதையின் மேலேற்றி ஊர்க்கோலங் காட்டி ஒட்டி விட்டார்கள். அந்த அடிகளை வாங்கிக் கொண்ட விறகு தலையன், முன்பு தமிழறியும் மடந்தையிடம் அடிபட்டு தங்கள் தேசத்திற்குப் போவதற்கு வெட்கப் பட்டுக்கொண்டு அந்நகரிலேயே இருந்த இராஜாக்களிடம் சென்று நடந்ததைச் சொல்லி முறையிட்டான். அது கேட்ட அவர்கள் அப்பா நாங்களும் தான் உன்னைப் போல், அவளிடத்தில் அடிபட்டு அவமானப்பட்டு இங்கு வந்துள்ளோம். நீ எங்களிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது. அவளுக்கு ஆயிரம் பொன் என்ன? பதினாயிரம் பொன் கொடுத்தாலும் பயன் ஒன்று மில்லை. அவளுக்கு நிகராகக் கவி சொல்லி அவளை வெற்றி பெற்றால்தான் காரியம் ஆகும். அப்படி கவி சொல்லி அவளை வெற்றிபெற இந்த கடல் சூழ்ந்த

உலகத்தில் யாருமில்லை. அவளுக்கு ஒருவரும் நிகரில்லை என்றனர்.

அவர்களிலே சிலர் பாண்டிய மன்னன் ஆளும் மதுரையில், அம்மன்னரிடத்திலே பிரசண்ட வித்வாம்சராகிய சங்கத்தார் சங்கப் பலகையின் பேரில் நாற்பத்தொன்பது பேர் இருக்கிறார்கள். அவர்களே கல்விக்குரியவர்கள், அவர்களுக்கு மிஞ்சினவர்கள் ஒருவரும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். இங்கே இவள் இப்படி பிரபலமாய் பெயரிட்டுக் கொண்டுள்ளதை அவர்கள் அறிய மாட்டார்கள். நீ உண்மையிலேயே சாமர்த்தியம் உள்ளவனாய் இருந்தால் அவர்களிடத்திலே போய் உன் மனக்குறையை முறையிட்டுக்கொள். அப்போது அவர்கள் வந்து அவளின் கர்வத்தை அடக்கலாம் அவர்கள் அல்லாது மற்றொருத்தரால் முடியாது. இங்கே யாரும் அவளுக்கு எதிரில்லை. நீ போகிறதானால் சீக்கிரம் புறப்பட்டு மதுரைக்குச் செல் பிள்ளாய் என்றார்கள்.

அதனைக் கேட்ட விறகு தலையன், நான் பொன் தேடிய அருமை எனக்கல்லவோ தெரியும். அப்படி நான் வருத்தப்பட்டு தேடிய பொன்னைக் கொடுத்து விட்டு சும்மா போவேனோ என்று மிக கோபமாய் புறப்பட்டு உடனே மதுரைக்குப் போனான். போன இடத்திலே சங்கத்தாருக்குப் பாற்குடங்கள் கொண்டு போனார்கள். விறகு தலையன் ஒரு சுக்குமாந்தடியை யெடுத்துக் கையிலே பிடித்துக்கொண்டு, குறுக்கே போய்

மறித்து நின்று நீங்கள் யாரடா? பாற்குடம் ஏதடா யாருக்கு கொண்டு செல்கிறீர்? என்று கேட்டான். அதற்கு இடையர்கள் சங்கத்தாருக்குப் பாற்குடம் கொண்டு போகிறோம் என்றார்கள். அது கேட்ட விறகு தலையனும் சங்கத்தாரேது, பாற்குடம் கொண்டு போகிறதேது என்று பாற்குடங்களைத் தகைந்துப்[1] போட்டான்.

அப்போது இடையர்கள் பிரமித்து நின்று இவன் யாரோ? தெரியாது, சங்கத்தாருக்கு இதுவரையில் பாற்குடங்கள் போவது தடை பட்டது இல்லையே, பாண்டிய மன்னர் முதலானோரும் சங்கத்தாருக்கு ஒருபோதும் எதிர்வார்த்தை சொல்லக் கூடாதே அப்பேர்ப் பட்ட சங்கத்தாரை சட்டை செய்யாமல் அவர்களுக்கு எடுத்துப் போகிற பாற்குடத்தை தகைந்தான் என்று பயந்தனர். உடனே அவர்களில் ஒருவன் ஓட்டமாக ஓடிப்போய்ச் சங்கத்தாரைக் கண்டு, சுவாமி எனக்கு யாதொன்றும் தெரியாது யாரோ ஒருவன் வந்து தங்களுக்குக் கொண்டு வருகிற பாற்குடங்களைத் தடுத்துப் போட்டான் என்று சொல்ல, சங்கத்தாரும் அச்செய்தி கேட்டுப் பிரமித்து நமது காரியத்திற்குத் தடையுண்டோ என்றும் அவன் எப்படிப் பட்டவன் என்றும் சொல்லி சங்கத்தார் இரண்டொருவர் எழுந்து வெளியிலே வந்து விறகு தலையனைக் கண்டு, நீ யாரோ? எங்களுக்கு வருகின்ற பாற்குடங்களைத் தடுக்கக் காரணம் என்ன வென்றார்கள்.

---

1. தகைந்து–கலைத்து.

அதற்கு விறகு தலையன் சொன்னான் உங்களுக்கு சங்கத்தார் என்கிற பெயரும், சங்கப் பலகையும், வித்தையாண்மையும் கூட இருக்கிறதோ? எள்ளளவும் இல்லாத நீங்கள் எனக்கு எம்மாத்திரம் என்று தடுத்தேன் என்றான். அது கேட்ட சங்கத்தாரும் எதனாலே இப்படிச் சொல்கிறாய், அதனை தெளியச் சொல்ல வேண்டுமென்றார்கள். அதற்கு விறகு தலையன் நக்கலாகச் சிரித்துக்கொண்டே பெரியோர்களே உறையூர்ப் பட்டணத்தை ஆளும் சோழ மன்னன் வீட்டு வெள்ளாட்டிப் பெண் தமிழுக்குடையவள் தானேயல்லாமல், தனக்கொரு வரும் நிகரில்லை என்று தனியே வேறு அரண்மனை கட்டிக் கொண்டு, மிக ஆடம்பரத்துடனே, தன் வாசலிலே தமிழறியும் மடந்தை என்ற பெயரினை வைத்துக்கொண்டு வாழ்கிறாள்.

அவள் எந்தெந்த தேசத்து மண்டலாதிபர்கள் வந்தாலும், அவர்களிடம் முதலில் ஆயிரம் பொன் வாங்கிக் கொண்டு, ஒரு கவியைச் சொல்லி அதற்குப் பொருள் கேட்டுப் பின்பு அக்கவிக்கான பொருள் தெரிந்து சொல்லாவிட்டால் அவர்களை அவ மரியாதை செய்து ஓட்டி விட்டு, கன்னி கழியாமல் சுகித்து[1] வாழ்ந்து வருகிறாள். இப்படிப் பேர் பெற்ற ஒரு பெண் பிள்ளை இருக்க உங்களுக்கு சங்கத்தார் என்கிற பேரும் இருக்கத்தக்கதோ சொல்லுங்கள் ஐயா என்றான்.

---

1. சுகித்தல்–இன்பம் அனுபவித்தல், செல்வம் அனுபவித்தல்.

அவன் கூறியதைக் கேட்ட சங்கத்தாரும் மிக நன்றாய் உள்ளது. நாங்கள் தமிழுக்கு உரியவர்கள் என்றும், எங்களுக்கு நிகராக ஒருவரும் இவ்வுலகத்தில் இல்லை என்றும் நாங்கள் எண்ணியிருக்க, ஒரு பெண் பிள்ளை இப்படிப் பெயரிட்டுக் கொண்டிருக்கிறாள் என்றாள் ஆச்சரியம், பிறகு எங்களுக்கு என்ன பெருமை யிருக்கிறது. இருந்தும் இன்றையவரைக்கும் ஒருத்தராவது வந்து இவ்விதமாகச் சொன்னதே இல்லை. எங்களிடம் சொல்லி முறையிட்டதும் இல்லை. நாங்கள் கேள்விப்பட்டதும் இல்லை. இப்போது நீ முறையிட்ட காரியம் என்ன? உனக்கு ஏதாகிலும் மனதில் குறை உண்டோ? சொல்வாய் என்று கேட்டார்கள்.

அப்போது அந்த விறகு தலையன் தான் கடைத்தெருவில் இருந்ததும், தமிழறியும் மடந்தை தன்னைப் பார்த்துக் காறி உமிழ்ந்ததும், அதற்காக விறகும், சந்தனக் கட்டைகளும் வீடுதோறும் கொண்டுவந்து போட்டதும், நகரத்துச் செட்டியார் தன்னை இராஜ வடிவாக்கி ஆயிரம் பொன் கொடுத்து மிகுந்த ஆடம்பரத் துடனே அனுப்பி வைத்ததையும், ஆயிரம் பொன்னையும் வாங்கிக் கொண்டு, ஒரு கவியைச் சொல்லி அடித்து ஓட்டிவிட்டது முதலான செய்திகளை வரிசையாகச் சொன்னான்.

ஐயா, சங்கத்தார்களே இது தொடர்பாகவே நான் உங்களிடம் வந்து விண்ணப்பம் செய்து கொண்டேன் என்றான். இது கேட்ட சங்கத்தாரும்

இவன் பேச்சை நம்பப்போகாதென்று மனதில் நினைத்து, மெய்யோ, பொய்யோ அதன் விவரம் அறிந்து வர வேண்டு மென்று, அந்த விறகு தலையனைத் தங்களிடத்திலே இருக்கவைத்துக் கொண்டு, பின் ஒரு மூடனை அழைத்து அவன் கையிலே ஆயிரம் பொன் முடிப்புக் கட்டிக் கொடுத்து ஒரு கவியும் எழுதிக் கொடுத்து அனுப்பினர்.

வெண்பா

மின்னேரிடையாய் விலைபேசி வாங்குமது
பொன்னாயிரண்டே போதாதோ - எந்நாளும்
சற்றென்றிராதே சதுரா வாங்கியது
பொற்றொடிக்கும் போதுபுகழ்.

இந்த கவி சொல்லிக் கொடுத்து இதற்கு அவள் என்ன சொல்லி அனுப்புகிறாளோ பார்த்துக் கொள்வோம் என்று மூடனை உறையூருக்கு அனுப்பி வைத்து தமிழறி மடந்தையைக் கண்டு அறிந்துவரச் சொல்லி அனுப்பினார்கள் அதன்படியே அவனும் உறையூர் நகர் சென்று தமிழறியும் மடந்தையின் அரண்மனை வாசலிலே நின்றான். அப்பொழுது மொண்ணச்சிகள் அவனைப் பார்த்து எங்கே இருந்து வருகிறாய் என்று கேட்க, அவனும் மதுரையில் இருந்து சங்கத்தார் அனுப்பி வைக்க வந்தேன் என்றான். என்ன கொண்டு வந்துள்ளாய் என்றனர். அதற்கு அவன் ஆயிரம் பொன்னும் ஒரு கவியும் கொண்டு வந்தேன் என்றான். அந்தப் பொன்னையும்,

கவியையும் வாங்கிக் கொண்டு போய் தமிழறியும் மடந்தை முன்பு வைத்து யாரோ? ஒருவன் மதுரையிலே சங்கத்தார் கொடுத் தனுப்பினதாகக் கொண்டுவந்து கொடுத்தான் என்று சொன்னார்கள். அதுகேட்டு தமிழறியும் மடந்தையும் நல்லதென்று கூறி அந்த கவியைப் பார்த்துப் படித்துக் கொண்டிருந்த கவியிலே தன்னைச் சபித்து எழுதி அனுப்பினார்கள் என்று கோபத்துடன் உடனே அந்தக் கவிக்கு மறுகவி எழுதினாள்.

வெண்பா

ஆடை பருத்தி தருமாகிலங்கொருத்தி
கோடிபருத்திகொண் டுனஞ்செய்வாள்-மூடர்
கவித்திறமையுண்டாகிற் கற்றநூற் கொண்டு
கவிப்பரோசங்கத் தவர்.

என்று இந்தக் கவியும் எழுதி அந்த மூடன் இடத்தில் கொடுத்து பொன்னையும் கொடுத்து அனுப்பினாள். அவன் மதுரை சென்று பொன்னையும், கவியையும் சங்கத்தார் முன்னே வைத்தான்.

சங்கத்தாரும் அந்தக் கவியைப் பார்த்து கோபமடைந்து, வெள்ளாட்டி தன்னை சொல்லிக் கொள்வது நாம் எல்லோரையும் மூடர்கள் என்று கவி எழுதி அனுப்பி உள்ளாளே. அவள் அரண்மனைக்குப் போய் கவிப்பிரசங்கம் செய்து,

அவளை அதிலே தோற்கும்படிச் செய்து அவள் அரண்மனையையும் பிடித்து, தமிழறியும் மடந்தை என்கிற பெயரினையும் மாற்றிப் போட்டு வர வேண்டும் என்று சங்கத்தார் நாற்பத்தொன்பது பேரும் எழுந்தனர்.

அப்பொழுது நக்கீரர், நாமெல்லாம் சென்று கவிப் பிரசங்கம் செய்து வென்று வருவது நன்மையல்ல. பார்ப்பவர்களுக்கு நன்றாக இருக்காது. ஒரு பெண் பிள்ளையிடம் நாற்பத் தொன்பது பேரும் சென்று வென்று வருவது நகைப்புக்கு இடமளிக்கும் அது எவ்வளவு ஈனத்துவம் அதனால் நமக்கு யாதொரு நன்மையும் இல்லை. நீங்கள் அனைவரும் இங்கேயே இருங்கள் நான் ஒருவன் மட்டுமே சென்று அவளிடம் கவிப்பிரசங்கம் செய்து, நான் அவளை அதிலே தோற்கும்படி செய்து, தமிழறியும் மடந்தை என்ற பெயரினையும் மாற்றி அமைத்து, இந்த விறகு தலையனுக்கே அவளை மணம் முடித்து வைத்துவிட்டு வருகிறேன் என்றார்.

அப்போது ஒருசிலர் தமிழறிவாள் என்கிற பெயர் பெற்று, அவள் ஒளவையாரின் வரத்தினால் யாராலும் வெல்ல முடியாதவளாய் இருக்கிறாள் என்றும் நாம் காற்று வாக்கில் கேள்விப்பட்ட செய்தி. ஆனால் அது ஏதோ, எவ்விடமோ என்று சட்டை செய்யாதிருந்தோம் நாம். அது இப்போது மெய்யாகவே விளைந் திருக்கிறது. அப்படி அவள் ஒளவையாரிடத்திலே வரம் பெற்று யாராலும்

எளிதில் வெல்ல முடியாதபடி இருக்கிறவளை, நக்கீரரே நீர்போய் எப்படி வென்று வருவீர்கள் என்று கேட்டதற்கு, நக்கீரர் நான் போய் அவளை வெற்றி பெறாமல் போவேனாகில் இன்னபடி என்று ஆக்கினை செய்து கொண்ட விவரம்,

வெண்பா

சென்றுறையூர்புக்கிச் சேயிழையை நான்கண்டு
வென்றுதமிழுழித்து மீளனேல் - மண்ணில்
விருந்திருக்கவுண்ட வெறுவல்யோடொப்பேன்
வருந்துவரோசங்கத் தவர்.

என்று சொல்லக் கேட்டதும் சங்கத்தார் அனைவரும் காதுகளைப் பொத்திக்கொண்டு சிவ சிவா என்று கூறினர். அதன் பின்னர் மிகவும் நல்லது உங்கள் எண்ணப்படியே போய் வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தனர். நக்கீரரும், விறகு தலையனை அழைத்துக் கொண்டு மதுரையிலிருந்து புறப்பட்டு, உறையூருக்கு வருகின்ற வழியில் நடுவே அடர்ந்த காடு இருந்தது. அந்தக் காட்டின் வழியே வருகின்ற பொழுது, ஒரு வடதாரி[1] மரத்தின் மேலே வள்ளிக் கொடி படர்ந்திருந்தது. அதை ஒரு வேடன் கண்டு மேலே இருக்கின்ற சிக்கு சிறகெல்லாம் அறுத்துப் போட்டுக் கட்டைப் பாறையினால் வள்ளிக் கிழங்கினை பெயர்த்துக் கொண்டு இருந்தான். இக்காட்சியினைக் கண்ட

1. வடமரம் - ஆலமரம்.

நக்கீரர் அச்செயலை ஒரு கவியாகப் புனைந்து கொண்டு, அவளுடனே தர்க்கம் செய்து வெல்ல இயலாத நிலை ஏற்பட்டால், இக்கவியைப் பாடி அவளை தோல்வி அடையச் செய்யலாம் என்று மனதில் எண்ணிக்கொண்டு, அவ்வழியே செல்லும் பொழுது, விறகு தலையனை அழைத்து என் அருகில் வாரும் பிள்ளாய், அவள் இருக்கும் அரண்மனையின் கட்டுக்காவல் என்ன? என்ன? அங்கே என்னென்ன அதிசயங்கள் உண்டோ? அவைகளை எல்லாம் விபரமாக எனக்குச் சொல் என்றார்.

அதற்கு அந்த விறகு தலையன், சொல்கிறான் ஐயா, அவள் இருக்கின்ற அரண்மனைக்கு ஏழு மதிலும், அறுபத்து நான்கு வாசலும் உண்டு. வாசலுக்கு வாசல் மொண்ணச்சிகள், கற்றுச் சொல்லிகள், எக்களத்திகள், சூத்திரப் பதுமைகள், யானைகள், புலிகள், கரடிகள், குரங்குகள், வேட்டை நாய்கள், கிணறு, குங்குமச்சேறு, சித்திர மண்டபத்தில் களிற்றி யானைத் தந்தக் கட்டிலும், பெண் யானைத் தந்தக் கட்டிலும் இருக்கின்றதாம். பின்னும் என்னென்னவோ இருப்பதாகவும் சொல்லு வார்கள், எனக்குத் தெரியாது. நான் அறிந்த மட்டிலும் இவைகள் தான் எனக்குத் தெரியும் என்றான்.

இதைக்கேட்டறிந்த நக்கீரர் அங்கே இன்னும் வினோதங்கள் இருக்கும் என்பதை ஓரளவு ஊகித்துக் கொண்டார். பின் விறகு தலையனை

அழைத்து எண்ணை சீலை, மூங்கிற்கனி, செம்பருத்திப்பூ, மல்லிகைப்பூ, காந்தக்கல், கட்டெறும்பு, அலவன்[1], வாழைத்தண்டு, கரும்பு கருணை, எலுமிச்சம் பழம் இவைகளை எல்லாம் சேகரித்துக்கொண்டு வா என்று அவனை அனுப்பிவைத்தார். அவனும் அதன்படியே சென்று அவைகளை சேகரித்துக் கொண்டுவந்து நக்கீரரிடம் கொடுத்தான்.

பின்னர் இருவரும் திருச்சிராப்பள்ளிக்கு வந்து மேற்கு முகமாகக் திரும்பிப் பார்த்தார்கள். உறையூர் பட்டணத்திலே தமிழறியும் மடந்தை வாழ்கின்ற உப்பரிகையின் மேலே செய்து வைக்கப்பட்டிருந்த பொற்குடம் தோன்றியது. அதனைக் கண்ட நக்கீரர் விறகு தலையனை அழைத்து அதோ உப்பரிகையின் மீதில் ஒரு பொற்குடம் தெரிகின்றதே அது எந்த ஊர்? என்ன கோபுரம் என்று கேட்டார். அதற்கு அவன் அது அந்த வெள்ளாட்டி தமிழறிவாள் அரண்மனைக் குள்ளே இருக்கின்ற உப்பரிகையின் மேல் அமைந்த பொற்குடம் ஐயா என்றான். அது கேட்ட நக்கீரர் பிறகு தம்முடைய மனதில் வேண்டிக்கொண்ட பொழுது,

வெண்பா

இதுவோசிராப்பள்ளி இதுவோவுறையூர்
இதுவோ தமிழறிவ ளெல்லை - யிதுவோ
இறைவளர்க்குஞ் சங்கமிவளழிப்தென்னே
குறைவறத்தான் வெல்வேன் குறித்து.

1. அலவன் – நண்டு.

என்று பிரதிக்கினை[1] பண்ணிக்கொண்டு, பின் உறையூர் நகர் சென்று சேர்ந்தனர். அப்போது மாலை நேரமாயிற்று, நக்கீரரும், விறகு தலையனை ஓரிடத்திலே வைத்து, தமது பச்சை வடத்தோவத்தி, பாலகை கடுக்கன், மோதிரம் மற்றுமுள்ள ஆபரணங் களை எல்லாம் விறகு தலையன் வசம் கொடுத்து, அவனை அந்த இடத்திலேயே இருக்கச் சொல்லி விட்டு, அவன் கட்டியிருந்த கரித்துணியை வாங்கி தலையிலும், இடுப்பிலும் கட்டிக்கொண்டு, இரண்டு கொடியைப் பிடிங்கி இடுப்பிலே சுற்றிக்கொண்டு, விறகு தலையனைப்போல் வேடம் பூண்டு சேகரித்த பொருட்களை மடியிலே அடக்கமாய் வைத்துக் கொண்டு, வாழைத் தண்டை சுமையாகக் கட்டி தலையிலே வைத்துக்கொண்டு தமிழறியும் மடந்தை இருக்கின்ற அரண்மனையினை நோக்கி வருகின்ற பொழுது சூரியன் மேற்கில் மறையும் நேரமானது.

நக்கீர தேவர் வாழைத்தண்டை விறகாகக் கட்டிக் கொண்டு சமூகச் சாலையில்[2] போய் முதல் கட்டு வாசலிலே கற்றுச் சொல்லிப் பெண்கள் இருப்பதைக் கண்டு பிறகு விலை கூறின,

வெண்பா

**வெய்யோன்கதிரெரிப்ப வேற்கண்ணாள்பின்றொடரப்
பையவருதென்றற் பயனறியேன் - துய்ய
மலர்த்தடங்கண் வாய்ந்த மயிலனையீர் கொள்வீர்
விலைக்குவிறகோ விறகு.**

---

1. பிரதிக்கினை - உறுதி, சபதம். 2. சமூகச்சாலை - வாசல்.

எனக் கூறியதனை கேட்ட கற்றுச் சொல்லிப் பெண்கள், இதுநாள் வரையில் நம் நாச்சியாருக்கு எதிராளி யாரும் வந்து நம்மிடம் கவி சொன்ன தில்லையே, அந்தக் கவியை நாம் கற்றுக்கொண்டு போய் அவளுக்குச் சொன்னதும் இல்லையே யார் வந்தாலும் அவனுக்கு, தமிழறிவாள் நம்மிடம் கவி சொல்லி அனுப்ப நாமும் வந்தவனிடம் அவள் சொல்லிய கவியைக் கூற, வந்தவன் பொருள் அறியாமல் விழிக்க, அவனை அடித்து ஓட்டி விடுவதல்லவோ இதுவரை நடந்து வந்தது. இன்று ஏனோ அதிசயமாக அல்லவா உள்ளது. வந்தவன் கவி கூறுகிறானே என்று எண்ணியவர் களாய், தமிழறியும் மடந்தையிடம் சென்று, ஒருவன் வாழைத்தண்டை விறகு கட்டு போலக் கட்டி தலைமேல் வைத்துக்கொண்டு விறகென்று விலை கூறிக்கொண்டு, இந்தக் கவியைச் சொன்னான் என்று சொன்னார்கள்.

அது கேட்டு தமிழறியும் மடந்தை மறு கவி சொல்லி அனுப்பினாள்,

வெண்பா

உள்ளீறம்பச்சை புகையுமெறியாது
கொள்ளீர்விறகென்று கூறீர் – மெள்ள
வீணரே போம்போம் வீணரோநீருந்
தாசரேசங்கத் தவர்

என்று சொல்ல இந்தக் கவியைக் கற்றுச் சொல்லிப் பெண்கள் கற்றுக்கொண்டு போய் விறகு

தலையனிடம் சொன்னார்கள். அதைக்கேட்டு விறகு தலையனான நக்கீரர் இரண்டாம் கட்டுக்கு உள்ளே சென்று சொன்ன,

வெண்பா

சாலவுலர்ந்துண்டு சாலகத்தினாற்புகைப்போம்
நீலவிழிமாதர்க்கு நின்றெரியுங் - கோலத்
தலைக்குவலையல் குங்கனங்குழலீர் கொள்ளீர்
விலைக்குவிறகோ விறகு.

கற்றுச்சொல்லிப் பெண்கள் இந்தக் கவியைக் கற்றுக் கொண்டுபோய் தமிழறியும் மடந்தை யிடம் கூறி னார்கள். அதைக் கேட்ட அவள் அவனைக் கொண்டாடி இவன் நல்ல வித்வானு மாய், நல்ல இலட்சணம் அறிந்தவனு மாய் இருக்கிறான். கவி வெகு நேர்த்தியாய் இருக்கின்றது. இதை நாமிரட்டிக்கப்போகா இன்று வரைக்கும் கன்னி கழியாமல் உண்டு சுகித்து கீர்த்தி அடைந்திருந்தோம். இப்போது இவன் என்ன காரணமாய் இங்கு வந்தானோ தெரியாது. இவன் நம்மை சோதிக்க வந்தவனாகத் தெரிகின்றது. ஆனாலென்ன இவனுடைய சமர்த்தையும் பார்ப் போம். இந்த கட்டுக்களை எல்லாம் கடந்து, என்னுடனே கவிப்பிரசங்கம் செய்து என்னைவிட வல்லவனாக அவன் இருந்தால், அப்பேர்ப்பட்டவனை கூடினால்தான் என்ன குற்றம் வந்து விடப்போகிறது என்று மனதில் எண்ணிக் கொண்டு மறுமொழியாக அனுப்பிய

வெண்பா

பால்பயவெட்டிப் பசுமையுலர்ந்தோ
கால்பட்டுவீழ்ந்துதைந்து கட்டினையோ - சாலப்
புதையுமோவுண்மை புகழ்ந்துரையாய்நீயும்
வகையாகவாசலிலே வந்து.

இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள், விறகு தலையனிடம் சொல்ல, அவ்விறகு தலையனான நக்கீரர், மூன்றாம் கட்டுக்குள்ளே சென்று சொன்னதாவது,

ஈரமுலர்ந்தே யெழும்புபோலே காய்ந்து
பாரங்குறைந்து பசையுலர்ந்து - நேரே
பிறகொன்றுமில்லை பேதையே கையாலே
விறகுதனைக் கொள்க விரைந்து.

கற்றுச்சொல்லிகள் விறகு தலையன் கூறிய இக் கவியைக் கற்றுக்கொண்டு போய், தமிழறியும் மடந்தையினிடத்தே சொல்ல, அப்போது அந்த நாச்சியார் சொல்லிய,

வெண்பா

விறகோவிறகென்று மென்மேலுங்கூறும்
விறகுவிற்பான்றன் னருகின்மேவி - விறகு
விலைகேட்டுவாருமென்று மெல்லியலாள் கேட்டாள்
கலைவாய்த்தமிழறிவாள் காண்.

இக்கவியைக் கற்றுக்கொண்டு போய் கற்றுச் சொல்லிப் பெண்கள் விறகு தலையனிடம் சொல்ல, அதுகேட்டு, விறகு தலையன் வேடத் திலிருந்த நக்கீரர் நான்காம் வாசல் கடந்து, ஐந்தாம் வாசல் சென்று

வெண்பா

கட்டுவிறகுதலை கன்னியரே கூறக்கேள்
வெட்டுவிறகுதனை வீரனா-ரிட்ட
நறைவர்குழன்மடவீர் நான்கொண்ட
விறகாயிரம்பொன் விலை.

என்று சொல்லிக் கொண்டு ஐந்தாம் வாசல் கடந்து ஆறாம் வாசலுக்கு வர, இந்தக் கவியைக் கற்றுச் சொல்லிகள் கற்றுக்கொண்டு போய் தமிழறியும் மடந்தை இடத்தே சொல்ல. இது கேட்ட அவள் இவன் நல்ல வித்துவானே என்று மனதில் நினைத்தவாறே சொல்லிய

வெண்பா

...........................ந்துமெரியாது பாரிடத்தில்
..........................வன்றோ வியம்பக்கேள் - நிச்சயமாய்
..,.........................சொல்லுகென வொத்ததெரிந்து வந்து
கிள்ளைகாள் சொல்லீர் கிளர்ந்து.

இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் விறகு தலையனிடம் சொல்ல, அவனும் ஏழாம் வாசலுக்கு வந்து கூறிய,

வெண்பா

ஐந்நூற்றிரட்டிப்பொன் னப்புரமுஞ்சோறுகறி
என்னூர்விறகுவிலை யிப்படியே - முன்னேநான்
சொன்னபடியேயொழியச் சொல்லறியாப்பேதை
கின்னூலிடையாட்குச் செப்பு.

இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் தமிழறியும் மடந்தையிடம் சென்று சொல்ல, அதுகேட்டு தமிழறி மடந்தை கவலை கொண்டாள். பின்

வருவது வரட்டும் பார்க்கலாம் என்று கூறி, கற்றுச்சொல்லிகள் கையிலே ஆயிரம் பொன்னும், படி அரிசியும், மிளகு, மிளகாய், கறி முதலியவைகளைக் கொடுத்து, இவைகளை அந்த விறகு தலையனிடம் கொடுத்துவிட்டு, அவன் கொண்டு வந்துள்ள விறகினை வாங்கிக்கொண்டு, அவனை அப்படியே அனுப்பிவிடுங்கள் என்றாள்.

அதன்படி கற்றுச்சொல்லிப் பெண்களும் வந்து அவனிடத்திலே ஆயிரம் பொன்னையும், அரிசி, கறி முதலியவைகளையும் கொடுத்து விறகினைப் போட்டுவிட்டு போ என்றனர். அவ்வாறே அவைகளை வாங்கிக்கொண்டு, அவர்கள் சொன்னபடி எட்டாம் வாசலில் வந்து விறகினைப் போட்டுவிட்டு, அங்கேயிருந்து கொண்டு கற்றுச் சொல்லிப் பெண்களை அழைத்து, இந்த ஆயிரம் பொன்னை உங்கள் நாச்சியாருக்கு இராத்திரிக்குப் பரியமாக வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள். இந்த அரிசியைப் பெற்றுக்கொண்டு, எனக்கு இரவு உணவு சமைத்து வைக்கச்சொல்லுங்கள் என்று கூறி அதற்கு ஒரு கவியும் சொல்லி அனுப்பி வைத்தான் விறகு தலையன்,

வெண்பா

தந்தபொன்னும் உங்கள் தமிழறிவாட் கேபணையம்
இந்தவரிசிக்கிடுமசனம் - முந்துமொழி
பாகனைய சொல்லீர் பகருமிந்தப்பாவையதனைப்
போகன்றாற் கூடாது போ.

இதனைக் கேட்ட கற்றுச்சொல்லிகளும் தமிழறிவாளிடத்திலே சென்று பொன், அரிசி முதலிய பொருட்களை வைத்துவிட்டு, அந்தக் கவியையும் சொன்னார்கள். இதைக்கேட்ட அவள் இது என்ன காரணமோ புதுமையாக இருக்கிறதே என்று மனம் சஞ்சலப் பட்டாள். பின்பு சற்றுத் தெளிந்து கற்றுச் சொல்லிகளிடம் கூறுவாள், அடிப்பெண்களே நீங்கள் பொன்னைக் கொண்டு போய் நம் அரண்மனை பொக்கிஷத்தில் சேர்த்து விட்டு, அந்த அரிசியைத் தொம்பரத்தில்[1] போட்டுச் சமையல் செய்யுங்கள். அந்த விறகு தலையனை நமது அரண்மனையின் புறவரைத் திண்ணையில் இருக்கச் சொல்லுங்கள். அதற்கு அவன் என்ன சொல்லுகிறானோ அதை நீங்கள் ஒன்றும் அறியாதவர்கள் போல் குறுக்கும் நெடுக்குமாக திரிந்து கேட்டுக்கொண்டு அதி சீக்கிரத்தில் வாருங்கள் என்று சொல்லி அனுப்பினாள்.

அவள் கூறியபடியே பொன்னை பொக்கிஷத்தில் சேர்த்துவிட்டு, அரிசியைத் தொம்பரத்தில் இட்டு சமைக்கும்படி வேலைக் காரர்களுக்கு உத்திரவு இட்டு விட்டு, விறகு தலையனிடம் வேகமாக வந்து, யாரையா நீங்கள் இந்த புறவரைத் திண்ணையில் உட்கார்ந்திரு மெனச் சொல்லிவிட்டு, அதற்கு அவன் என்ன சொல்லுகிறானோ அதை அறிவோமென்று, ஒன்றும் தெரியாதவர்கள் போல குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

---

1. தொம்பரம் – பந்தி, பேரில்லம்.

விறகு தலையனான நக்கீரர் தாதிகள் உத்திரவின்படி திண்ணை மீது இருந்தபொழுது, அந்த திண்ணைக்கு எதிரே ஒரு பனைமரமும், ஒரு புளிய மரமும் வளர்ந்து இரு மரங்களும் ஒன்றாகப் பிணைத்துக் கொண்டிருந்தன. மாலை நேரமானபடி யினாலே, ஒரு கொக்கு வந்திறங்கி அம்மரத்தின் மீது அமர்ந்தது. அந்த கொக்கைப் பார்த்து நக்கீரர்

வெண்பா

புளியிலரும்பணையிற் பொன்றலைக் கோகேகே
ளிளமைமொழியாதிருந்தீர்க ளருவ - தேனை
எம்மைப் பிரிந்தவரோ யெம்மிலுந்தாரியரோ
உம்மைப்பிரித்தா ருரை.

என்று சொல்ல, இந்தக் கவியை கற்றுச்சொல்லிகள், தமிழறிவாளிடம் சென்று சொல்ல, அது கேட்டு தமிழறிவாளும் விறகு தலையனான நக்கீரதேவரை அந்தக் கட்டைக் கடந்து ஒன்பதாவது கட்டுக்குள் அழைத்து வரும்படிச் சொன்னாள். அதன்படியே இவர்களும் அழைத்து வந்தார்கள். அப்போது அந்தக் கட்டுக்குள்ளிருந்து விறகு தலையனான நக்கீரர்

வெண்பா

ஊசிமுனையி லொளிமுத்துக்கோத்தது போல்
வீசுமணிவந்து மெய்குளிர - மூசு
முலைத்தடங்கண்மாதே முழுவினையேற்கின்று
நிலைக்கடையோ நிச்சயித்தாய் நீ

என்று சொல்லக் கேட்ட கற்றுச்சொல்லிப் பெண்கள், உடனே சென்று தங்கள் எஜமானியான தமிழறி வாளுக்குச் சொல்ல அதுகேட்ட அவளும், அவனை அழைத்து வந்து, வைக்கோல் படுக்கைப் போட்டுக் கொடுங்கள் என்று கூறினாள். அவள் கூறியபடியே அவர்களும் பத்தாவது கட்டுக்குள் அழைத்து வந்து வைக்கோல் படுக்கைக் கொடுக்க, அந்த வைக்கோல் படுக்கையின் மேலே ஒரு கந்தையைப் போட்டுப் படுத்துக்கொண்டு விறகு தலையனான நக்கீரர்

வெண்பா

வைக்கோற்சயனத்தில் வாரிமுன்றானையின்மேல்
மெய்த்தோல்வருந்திக் கிடவுடம்பே – மொய்க்கு
மதுவொழுகுபூங் கொன்றைவார்கடையோ
னிற்றையகிதுவோவிதித்த தெமக்கு.

என்று சொல்லிய கவியைக் கற்றுச்சொல்லிகள் கொண்டு போய் பெண்கள் சிகாமணியாய் விளங்கும் தமது முத்தமிழறிவாளுக்குச் சொல்ல, அவளும் அதனைக் கேட்டு, என் அருமைத் தோழிகளே நீங்கள் அவனை இப்பால் அழைத்து வந்து சீலைப்பாயும், வைக்கோல் தலையணையும் சேகரித்துக் கொடுங்கள் என்று கூறினாள். உடனே கற்றுச் சொல்லிகளும் அவ்வாறே செய்து கொடுத்தனர். விறகு தலையனான நக்கீரர் பதினோராவது கட்டுக்குள்ளே வந்து, சீலைப் பாயின் மேல் சயனித்துக்கொண்டு

வெண்பா

சரசரத்தாயுந் தலையணைவைக்கோலும்
பரபரத்தமச்சினிமார் பணியும் - விறகுடனே
யீங்கிவர்கள்செய்ய மியம்புமிவர் கலமும்
நீங்காதென்னுஞ்சத்து ணின்று.

என்று சொன்ன கவியைக் கற்றுச்சொல்லிகள் போய் மின்னற்கொடி போன்ற இடையையும், பொற் கிண்ணம் போன்ற தனபாரங்களையும், சிறந்த கல்வித் திறமும் உடைய தங்கள் தலைவியாகிய தமிழறி வாளிடம் சொல்ல, அதுகேட்டு அவள் அந்த விறகு தலையனை பனிரண்டாவது கட்டுக்குள்ளே அழைத்து வந்து ஓர் ஈச்சம்பாயும், தலையணையும் போட்டுக் கொடுங்கள் என்று கூறினாள்.

அச்சொல்லைக் கற்றுச்சொல்லிகள் சிரமேற் கொண்டு அந்த விறகு தலையனை அழைத்துத் தங்கள் தலைவி சொன்னபடி செய்து கொடுத்தார்கள். பின் விறகு தலையனான நக்கீரர் அதன் பேரிலே இருந்துகொண்டு

வெண்பா

குடவன்[1]கடிக்க குளிர்வாடைவீசக்
கிடவென்றுடத்தே கிடந்தே - மடநல்லார்
மென்குறங்கைத்தீண்ட விதியில்லையாதலினா
லென்குறங்கை[2]யான்றழுவி னேன்.

எனச்சொல்லிய கவியை கற்றுச்சொல்லிப் பெண்கள் கேட்டுச் சென்று தமது அரசியாகிய தமிழறிவாளிடம் சொல்ல, அவளும் இவன் நல்ல

1. குடவன் – உண்ணி, 2. குறங்கை – தொடை.

வித்துவானே, அற்பமானவன் அல்ல என்று எண்ணிக்கொண்டு, பதின்மூன்றாவது கட்டுக்குள் அழைத்து வந்து ஒரு நார்க்கட்டிலும், ஈச்சம்பாயும், தலையணையும் போட்டுக் கொடுத்து, நம்மிடத்திலே சேவிக்கின்ற பெண்களிலே அதிக அழகுடனே ஆடும் மடந்தையைச் சிங்காரித்து அவனிடத்திலே அனுப்பிவையுங்கள் என்றாள்.

தங்கள் தலைவி கூறியபடியே கட்டிலும், பாயும் போட்டுக் கொடுத்து அதிலே விறகு தலையனை இருக்கச் சொல்லி, அழகுடன் ஆடும் மடந்தையைச் சிங்காரித்து அனுப்பிவைத்தனர். அவளும் வந்து அவன் எதிரே நின்றாள். அவளைப் பார்த்து விறகு தலையனான நக்கீரர்

வெண்பா

பறிபோலுங்குண்டாத்தாள் தானவளைப்போலே
நெறியாகவந்தென்மு னின்றாய் சிறுபுலிதான்
தீரப்பசித்தாலுந் தின்னாப்புற்றின்னுமோ
நேராக்கல்லாதே நீ.

என்று சொன்ன கவியைக் கேட்டு அவளும் தலையை தொங்கப்போட்டுக் கொண்டு போய், தமிழறி வாளிடத்தில் சொல்லியதைக் கேட்ட தமிழறி மடந்தையும் பதினாலாவது கட்டுக் குள்ளே அழைத்துக் கொண்டுபோய் ஒரு குச்சுக்கட்டிலும், ஈச்சம் பாயும் போட்டுக் கொடுத்து, நம்முடைய தாதிகளிலே இரத மோகினியைச் சிங்காரித்து அனுப்புங்கள் என்று கூறினாள். அதன்படியே கட்டிலும் போட்டு, அப்

பெண்ணையும் சிங்காரித்து அனுப்பினார்கள். அவள் வருகிறபோது விறகு தலையனிடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு இருண்டு இருந்தது அதுகண்டு இவள் போய் அந்த விளக்கின் திரியைக் கையாலே தூண்டிவிட்டு, கையில் பட்ட எண்ணெயைத் தலையிலே தடவிக்கொண்டாள். இதனை விறகு தலையனான நக்கீர தேவர் கண்டு, இவள் இந்த வீட்டு வெள்ளாட்டி என்று அறிந்து அவளைப் பார்த்து

வெண்பா

சுள்ளிவிறகு சுமைதலையானானாலுந்
தெள்ளுதமிழறிவாள் சேராமலுள்ளஞ்
செழும்பாகினுமினிய தேன்சொலாய்கூடேன்
தொழும்பாமுன்னாத்தியுடன் சொல்.

என்று கூறிய கவியைக் கேட்டு அவளும் வெட்கித் தலைகுனிந்தாள். பின் தமிழறிவாளிடம் சொல்லி வருந்தினாள். இது கேட்ட தலைவி அவனை பதினைந் தாவது கட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு போய் கட்டில் தூங்கு மஞ்சத்தின் பேரில் மெத்தை, தலையணையும், சீனிப் பாயும் போட்டுக் கொடுத்து, நம்முடைய தோழிப் பெண்களிலே மதனசேனைக்கு என்னுடைய வெண்சாமரையும், பொற்களஞ்சியும், பொன்னின் மிதியடியும், பொற்பட்டாடையும் அணிவித்து சிறப்பாகச் சிங்காரித்து விறகு தலை யனிடம் அனுப்பிவைக்கச் சொன்னாள். அதன்படியே தூங்கு மஞ்சம் போட்டுக் கொடுத்து

மதனசேனையை அலங்கரித்து அவனிடம் அனுப்பி வைத்தனர். வந்து நின்ற அவளைப் பார்த்து விறகு தலையனான நக்கீரர்

வெண்பா

ஆடையுடையு மவள்காண்மிதியடியு
முடியவளாகவந்தென் முன்னின்றாய் - மாடுபோற்
குண்டநான்சேர்வேனோ கோதையர்கள் செய்திதனை
கண்டேன்கண்டேனுக் கணக்கு.

என்று சொன்ன கவியைக் கேட்டு, தமிழறி வாளிடத்திலே சொல்லி மிகவும் துக்கப்பட்டாள். அவள் துக்கத்தை மாற்றி இவன் வந்த காரணம் ஏதோவென்று விசாரமிட்டு கற்றுச்சொல்லிப் பெண்களால் மொண்ணச்சிகளை அழைத்து, அந்த விறகு தலையனை பதினாறாவது கட்டுக்குள் அழைத்துக் கொண்டுபோய், தொம்பரத்திலே சமைத்திருந்தால் சாப்பிடுங்கள் என்று சொல்ல, அப்படியே அழைத்து ஒரு கல்லாலியைத் தைத்துப் போட்டு வெந்ததும், வேகாததும், கல்லும் நெல்லுமாய் சாப்பாடு கொண்டுவந்து வைத் தார்கள். அந்தச் சாப்பாட்டைப் பார்த்து, இவர்கள் வீட்டில் சாப்பிடாதவரானபடியால், சாப்பாடு இருக்கின்ற திட்டமும் பார்த்துச் சாப்பிடுகிற பாவனையாய்ச் சாதத்தின்மேல் கையை வைத்துக் கொண்டு, விறகு தலையனான நக்கீரர்

கலித்துறை

நெல்லான்மருதமண லுண்மையானெய்த நீண்டகன்ற
கல்லாற்குறிஞ்சிமகரின் வெம்பாலைகலையின்முல்லை

வில்லாம்புருவத்துவேனெடுங்
கண்ணின்மெல்லிநல்லாள்
சொல்லால்நிலமட்டுங்காட்டுவனியிட்ட சோரிடத்தே.

என்று சொல்லியதற்குப் பொருள் சொன்ன,

வெண்பா

கல்லொன்று நெல்லிரண்டு காணுமணன்மூன்றரிசி
கல்லையுடனஞ்சுவகை காட்டினேன் - வின்னுதலாம்
வல்லபடிசெய்த வகையெல்லாமுங்களது
முல்லை நகையாட்கு மொழி.

ஒன்றிரண்டு உதவியும் சொல்லிக்காட்டி, ஆசனத்தையும் தள்ளிப்போட்டு அப்பாலே போயிருந்தார். அது கேட்டு கற்றுச்சொல்லிகள் போய் தமிழறி வாளிடம் சொன்னார்கள். தமிழறிவாளும் நல்ல தென்று சொல்லி அந்த விறகு தலையனை கச்சேரி மண்டபத்திற்கு வரச்சொல்லி அழையுங்கள் என்றாள். அதன் படியே கற்றுச்சொல்லிகள், எக்களத்திகள் வந்து விறகு தலையனை கச்சேரி மண்டபத்திற்கு வாருங்கள் என்று அழைத்தார்கள்.

விறகு தலையனான நக்கீரதேவர், கச்சேரி மண்டபத்திற்கு வருகிறபோது பதினேழாம் கட்டுக் குள்ளே சூத்திரப் பதுமைகள் இவரை ஆகடியம்[1] செய்யும் பொருட்டு, எதிரிலே வருவதைக் கண்டு தெண்டாலே அடித்தார். அந்தச் சூத்திரப் பதுமைகள் எல்லாம் கலைந்து விழுந்தன. அதற்கடுத்து பதினெட்டாம் வாசலிலே போகிறபோது இரண்டு பக்கமும் புலிகள் சீறி

1. ஆகடியம் – கிண்டல்.

வந்தன. அந்தப் புலிகளின் முன்னே செம்பருத்திப் பூவைப் போட்டார். அவை அப்பூக்களை மாமிசம் என்று நினைத்து அவற்றை எடுத்துக்கொண்டு ஓடின. அது கடந்து அப்பால் பத்தொன்பதாம் வாசல் வருகின்றபொழுது இரு புறங்களிலும் கரடிகள் சீறி வந்தன. அப்போது காந்தக்கல்லைக் கற்தூணில் தட்டினார். அதிலே நெருப்புப் பொறி வந்தது கண்டு கரடிகள் பயந் தோடின.

இவைகளை எல்லாம் கடந்து இருபதாம் வாசலுக்கு வருகிறபொழுது, இரண்டு பக்கமும் யானைகள் கர்ஜித்து தும்பிக்கையை நீட்டிக் கொண்டு எதிரே வந்தன. அவைகள் தும்பிக் கையிலே கருப்பங் கருணையைக் கொடுத்தார். அதனை வாங்கிக் கொண்டு யானைகள் தூரத்தே சென்றன. அந்த வாசல் கடந்து, இருபத்து ஒன்றாம் வாசல் வருகிறபோது குரங்கு சீறி வந்தது. அதன் முன்னே கட்டெறும் பையும், நண்டையும் விட்டார். அது கண்டு குரங்கு பயந்து ஓடியே போனது. அது கடந்து இருபத்து இரண்டாம் வாசல் வருகிறபோது வேட்டைநாய் பாய்ந்து வந்தது. அந்நாயின் முன் மல்லிகைப் பூவினைப் போட்டார். அது சோறு என்று நினைத்து முகந்து கொண்டு நின்றது.

இருபத்து மூன்றாம் வாசலில் போகிறபோது கிணறு இருந்தது. அந்தக் கிணற்றில் இறங்கினால் சூத்திரப் பலகையானது மேலே மூடிக் கொள்ளும்படி அமைக்கப்பட்டிருந்தது. இதனை

அறிந்த நக்கீரர் அக்கிணற்றிலே ஒரு கல்லைப் போட்டார். உடனே சூத்திரப் பலகை கிணற்றை மூடிக்கொண்டது. அந்தப் பலகையின் மேலேறி இருபத்து நான்காம் வாசலில் போகும்போது, அந்த வாசலிலே குங்குமச்சேறு இருந்தது. அப்பொழுது எண்ணைச் சீலையை எடுத்து காலிலே தடவிக்கொண்டு, அங்கங்கே பட்டிருக்கிற சேறெல்லாம் மூங்கிற் பிளவால் நன்றாக வழித்துப் போட்டு, அங்கே வெள்ளித் தட்டில் வைத்து இருக்கிற ஆழாக்கு பனிநீரிலே காலைக் கழுவிக்கொண்டு, மற்ற பாதி பனி நீரையும் தன்பின்னே சூழ்ந்து வருகிற தாதிகள் கையில் கொடுத்து, இந்தப் பனிநீரைக் கொண்டு போய் உங்கள் நாச்சியாரின் தலையிலே ஊற்றுங்கள் என்று சொல்லி அந்த வாசல் கடந்து வந்தார்.

அதனைக் கடந்து இருபத்தைந்தாம் வாசலுக்கு வருகின்றபோது அங்கே சித்திர மண்டபத்தில், பாரதம், இராமாயணம் மற்றுமுள்ள கதாபாத்திரங்கள் எல்லாம் எழுதியிருந்தன. அவைகளைப் பார்த்து நாம் இங்கே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் பொழுது விடிந்து போகும் என்று நினைத்து, விரைவாகச் செல்ல முயன்றபோது பின்னாலே வந்த மொண்ணச்சிகள் வேண்டுமென்றே விறகு தலையனைப் பார்த்து, இந்த சித்திரங்களில் இருக்கின்ற வினோதங்களைப் பாரும் என்று அழைத்தனர். அதற்கு விறகு தலையனான நக்கீரர்

வெண்பா

கலைகாட்டுந்தோகைக் கருஞ்சக்கரத்தின்
வலைகாட்டியாயிரம் பொன்வாங்கிக் - கலைநெகிழா
சூத்திரமாய்த் தோடுங் குறிபோலிருந்ததிந்த
சித்திரமுஞ்செய்யுஞ் சே.

என்று சொன்ன கவியைக் கற்றுச்சொல்லிகள் போய்த் தமிழறிவாளிடம் சொல்லத் தமிழறி மடந்தையும் மிகவும் மகிழ்ச்சியடைந்து உடனே அவனை அழைத்து வாருங்கள் என்றாள்.

அப்படி அழைத்து வருகின்றபொழுது இருபத் தாறாம் வாசலிலே நீராழி மண்டபம் இருந்தது. அதிலே மிதப்பு போட்டுக்கொண்டு பள்ளமறிந்து சென்று கரை ஏறிப்போனார். அப்பால் செல்லும்போது இருபத் தேழாம் வாசலிலே பளிங்கு மாமண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தின், மேலே செய்து வைத்திருக்கின்ற சித்திரங்களைப் பார்த்தால் கீழே கால் சறுக்கி விழுந்து விடுவார்கள் அப்படி ஒரு அமைப்புடன் அம்மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

அதனை அறிந்த விறகு தலையனான நக்கீரர் விழாமல் இருக்க உபாயம் கண்டு அதனைக் கடந்து போய், அப்பால் இருபத்தெட்டாம் வாசலிலே இருந்த தமிழறி மண்டபத்தினைக் கடந்து, இருபத் தொன்பதாம் வாலிலே இருந்த இயலறி மண்டபமும் கடந்து செல்லும் பொழுது, அதற்கடுத்து முப்பதாம் வாசலிலே கூத்துப் பார்க்கிற மண்டபம் இருந்தது. அம்மண்டபத்தில்

கோழிச் சேவல் போரும், ஆட்டுக்கிடாய்ப் பாய்ச்சலும் மேலும் அநேக வினோதங்களும் இருந்தன. அந்த மண்டபத்திலே கூத்தாடுகிறதும், மத்தளம் போட்டுக் கொண்டு நாடகசாலைப் பெண்களும், கூத்தாடிகளும் இவருக்கு எதிரே புகழ்ச்சி பண்ணிக்கொண்டு ஆட வந்தார்கள்.

இந்த வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் பொழுது விடிந்து போய் விடும் என்பதை அறிந்த நக்கீரர் வந்த காரியம் ஆகவேண்டும் என்று எண்ணி அவர்களைப் பார்த்து, உங்கள் ஆட்டம் பாட்டம் எல்லாம் உங்களுடைய நாச்சியாரே பார்க்கட்டும் நான் இவைகளைப் பார்க்க இங்கு வரவில்லை என்று சொல்லிவிட்டு, அது கடந்து அப்பால் கச்சேரி மண்டபத்திற்குப் போகிறபோது, தாதிகள் சென்று தமிழறிவாளிடத்தில் முப்பத்தொரு வாசலும் கடந்து வந்து விட்டான் என்று சொன்னார்கள். இதனைக் கேட்ட தமிழறிவாள் மகிழ்ச்சியுற்று இத்தனை கட்டுக்காவலையும் கடந்து வந்த இவன் தேவனே என்று அந்த மண்டபம் விட்டு அகன்று தன் அரண்மனைக்குப் போனாள்.

நக்கீரரும் அந்தக் கச்சேரி மண்டபத்திற்கு வந்தார். அம்மண்டபம் நவரத்தினங்களாலும், பட்டு பட்டாவளி சீனி சீனாம்பரத்தினாலும் அலங்கரிக்கப் பெற்று அதிலே மயில்கள் ஆடவும், குயில்கள் கூவவும், அன்னங்கள் நடந்து விளையாடவும், வண்டினங்கள் பாடவும்,

பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்சிக் கொஞ்சிப் பேசவும், தென்றல் வீசவும் அமைந்திருந்தது. அங்கிருந்த மேற்கட்டு கட்டிலில் சூத்திரப் பதுமைகள் முப்பத்திரண்டுவகை மேளவாத்தியம் செய்யவும், சாம்பிராணியின் மணமும், மல்லிகை, முல்லை, சாதி புன்னை, மருக்கொழுந்து போன்ற வைகளும், இவைகளை ஒத்த பரிமள திரவியங்களும் கமகம வென்று மணம் பரப்பிக் கொண்டிருக்க இப்படி நானாவிதமான அலங் காரம் செய்விக்கப்பட்டுள்ள கச்சேரி மண்டபத்தில் களிற்று யானைத் தந்தக் கட்டிலும், நவரத்தின கச்சிதமாகச் சோடித்து இரண்டு கட்டிலும் சோடாகப் போட்டிருந்தது.

நக்கீரதேவர் இந்தப் புதுமைகளை எல்லாம் கண்டு அதியசம் அடைந்து, இத்தனைக்கும் வல்லவள் ஆனபடியினாலே, இத்தனை ஆடம்பரப் பரப்பு வட்டனை அலங்கார வலிமையினாலே தனக்கு ஒருவரும் எதிரில்லை என்று விருது கூறிக்கொண்டிருக் கிறாள். இவளை வெல்வது எளிது அல்ல என்று சிறிது கலக்கமடைந்து, ஆனால் என்ன நம்முடைய குருவாகிய சுப்பிரமணியக் கடவுள் பாதாரவிந்தமே துணையென்று எண்ணியவராய், அந்தக் கட்டிலின் அருகே வந்தார். வந்தவர் அக்கட்டிலைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார். இந்தக் கட்டில் இரண்டையும் ஆண் கட்டில், பெண் கட்டில் எனப் பிரித்து தம்முடைய கையினாலே ஒரு கட்டிலை நெருக்கி யிருத்திப் பார்க்கத்

தளர்ந்திருந்தது. அதனால் இது பெட்டியானை தந்தக் கட்டில் பெண் கட்டில் ஆகும் என்றறிந்து கொண்டு, தமது கால்மாடு தலைமாடு தெரியாமல் இருந்தபடியினாலே அதனை அறிய வேண்டி, தம் கையிலிருந்த எலுமிச்சம்பழத்தை எடுத்து அந்தக் கட்டிலின் நடுமையத்திலே வைத்தார். அப்பழம் உருண்டு போய் கால்மாட்டில் நின்றது. அது கண்டு கால் மாட்டில் சூத்திரப் பதுமைகளும், தலை மாட்டிலே நிலைக்கண்ணாடியும் இருக்கின்றது என்பதை அறிந்துகொண்டு, அக்கட்டிலின் மேலே ஒரு கந்தையை விரித்துப் போட்டு ஏறிப் படுத்துக் கொண்டார். அக்கட்டிலிலே பதுமைகள் கட்டி வைக்கப் பட்டிருந்ததால் மேற்படி சூத்திரப் பதுமைகள் எல்லாம் கால் பிடிக்கவும், உடம்பு பிடிக்கவும், மயில் தோகை விசிறி எடுத்து விசிறவும், கண்ணாடி எடுத்துக்காட்டவும், வெண்சாமரம் எடுத்து வீசவும் இது போன்ற பணிவிடைகளை எல்லாம் பதுமைகள் செய்ய விறகு தலையனான நக்கீரர் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு, கற்றுச்சொல்லிப் பெண்கள் தங்கள் தலைவியிடம் சென்று கூறினார்கள்.

கற்றுச்சொல்லிகள் கூறியதனைக் கேட்ட தமிழறி மடந்தை சிறிது மனம் கலக்கமுற்று, பின்னர் மனம் தெளிவுபெற்றவளாய், இவன் எத்தகு திறன் பெற்றவன் என்பதில் சந்தேக மில்லை. இப்பேர்ப்பட்ட வித்வானைச் சேர்ந் தாலும் ஒன்றும் தோஷமில்லை. மோட்சமே

உண்டாகும். இருப்பினும் இன்னும் இவனுடைய திறமையைச் சோதித்துப் பார்ப்போம் என்று எண்ணினாள். அதன்படி தன்னுடைய தோழியான இயலறிவாளை வரவழைத்து, அவளுக்கு தன்னுடைய ஆபரணங் களை எல்லாம் அணிவித்து சிங்காரித்து வெகு ஆடம்பரத்துடனே அனுப்பினாள். அவளும் தமிழறிவாள் வடிவாகவே வந்து நின்றபோது, அவளைக்கண்ட நக்கீரர் இவள் தமிழறிவாள் அல்ல என்று தன் மனதிலே எண்ணிக்கொண்டு

வெண்பா

முத்துநகையுமுகிழ்முலையு மெஞ்ஞானச்
சித்தசிவம்போலத்தாதியரா - மெத்தெனவந்
தன்புருகா நெஞ்சத் தவரிருக்க நீர்வரலென்
பொன்ஃசிலம்புஞ் சிற்றடியாய்போம்.

இப்படிச் சொல்லக் கேட்ட இயலறிவாளும், நீங்கள் என்னைப் பழித்தாலும் நல்லது வெகுமானமாய்ப் போவென்றீரே அதுவே போதுமென்று சொல்லி விட்டு தமிழறிவாளிடம் சென்று நடந்தவற்றைச் சொன்னாள்.

இதனைக் கேட்ட தமிழறிவாளும் இனிமேல் யாரை அனுப்பினாலும் ஒன்றும் ஆகப் போவதில்லை. நானே நேரில் போய்த்தான் ஆகவேண்டும் என்று நினைத்தவளாய் தன் தாய் மரகதவடிவை அழைத்துச் சொல்கிறாள், விறகு தலையன் இடத்தில் நாம் யாரை அனுப்பினாலும் அவன் அவர்களைக் கண்டறிந்து பழித்துக் கூறி

ஓட்டிவிடுகிறானே, இனி நான்தான் அவனிடத்தே போகவேண்டுமென்று கேட்க தாய் மரகத வடிவு சொல்கிறாள், விறகு தலையனாவது ஏது? நீ அவனிடத்திலே போகிறதாவது; இது நன்றாகவாயிருக்கிறது நீ இது நாள்வரையிலும் தமிழறிவாள் என்று பெயர்பெற்று உனக்கு எதிர் யாருமில்லை என்று பெரும் புகழ் படைத்து விளங்கினாய். இப்போது வந்தவனுக்கு ஏற்ற சமர்த்தாராய்ந்து சொல்லிக்கொண்டு, சிறுபிள்ளை களை அழைத்து அவன் முன்னே விடியும் வரை கேளிக்கையாடச் சொல்லி, வேடிக்கைக் காட்டுவித்து பொழுது விடிந்தபின்னே இளிச்சவாய்ப்பித்தா மோசம் போனாயோ என்று அடித்து ஓட்டிவிடுவதை விட்டு விட்டு, அந்த விறகு தலையனைக் கூடவும் விதியோ மகளே வேண்டாம் என்றாள்.

அது கேட்டு தன் தாய் மரகதவடிவிற்குத் தமிழறிவாள் சொல்கிறாள். வந்தவன் எங்கேயாகிலும் மோசம் போனால் அல்லவோ அடித்து ஓட்டுவதற்கு, அவன் தான் நல்ல லட்சணம் அறிந்தவனாய், மகத்தான வித்துவானு மாக இருக்கின்றான். கட்டுக்குக் கட்டு கவி சொல்லி வந்த சமர்த்தையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நம்மிலும் வல்லமை பெற்ற வரை நாம் வாய் வலிமையால் அடித்து ஓட்டிவிடுவோ மானால் இப்பூமியிலே நம் பெயர் அபகீர்த்திக்கு இடமாகும். மேலும் அவனும் நம்மை வசைபாடி கவி புனைந்து விடுவான். இது

தக்க காரியம் அல்ல என்று தாயான மரகதவடிவியிடம் தமிழறிவாள்

வெண்பா

> கல்லாவொருவன்றோள் சேர்தலினுங்கற்றவனோ
> டல்லற்படுவ தழகன்றோ - சொல்லாய்
> கரும்பிரசங்கசக்குமோ கல்வியறிகோதாய்
> விரும்புவரோ வேம்பின்கனி.

என்று சொல்லிக் காட்டிய உடனே தாயான மரகத வடிவு சம்மதித்து நல்லது போவென்று கூறினாள். அதன் பிறகு தான்போய் சலக்கமனை புகுந்து பச்சிலை பதமஞ்சனரைத்துச் சலக்கமாடித்[1] தான் பூண்டு கொண்டிருந்த ஆபரணங்களை எல்லாம் கழற்றிப் போட்டுவிட்டு, கண்ணுக்கு மையிட்டுக்கொண்டு, சந்தனம் பூசிக்கொண்டு, நெற்றிக்குத் திருநீறும் கஸ்தூரிப் பொட்டும் இட்டுக்கொண்டு, ஒரு வெள்ளைப் புடவையினை உடுத்திக்கொண்டு, தாதிகளுக்குரிய உடைமைகளை இட்டுக்கொண்டு, இன்னும் தன்னை அடையாளம் காணாமல் இருக்க வேண்டுமென்று எண்ணி, முன்னரே போய் வந்த இசையறியும் மடந்தையினை அழைத்து, அவளுக்கு முன்னிலும் மிகுதியாகத் தன்னைப் போல் அலங்காரம் செய்துவித்து, திரும்பவும் வந்தாளே இவள்தான் தமிழறிவாள் என்று அவன் மனதிலே எண்ணவேண்டும் என்று நினைத்து, வெகு ஆடம்பரமாக மேளதாளங்கள் முழங்க, கட்டியக்காரன்[2] எச்சரிக்கை செய்ய, இசையறியும்

---

1. சலக்கமாடி – நீராடி. 2. கட்டியக்காரன் – புகழ்ந்து கூறுவோன்.

மடந்தையை முன்னே நடத்திக்கொண்டு, தான் அவளுக்கு அடப்பக்காரியைப் போல் பின்னே நின்று வெற்றிலை மடித்து நீட்டி நீட்டிக் கொடுத்துக் கொண்டு விறகு தலையனான நக்கீரதேவர் இருக்குமிடம் வந்தாள்.

வருகின்றவர்களுடைய இலட்சணத்தைப் பார்த்த நக்கீரர், முகம் இருக்கின்ற ஒளியையும், அவள் பார்க்கின்ற பார்வையினையும், அவள் அழகின் அதிசயத்தையும், நடையினொடிப் பையும், பிடியில் அடக்கும் இடையையும், மூன்றாம் பிறைச் சந்திரனைப் போலேயிருக்கின்ற அவளுடைய முகப்பருவத்தின் அழகையும் பார்த்து இவளே தமிழறிவாளாக இருக்க வேண்டும். இவள் தன் ஆபரணங்களை எல்லாம் கழற்றிப் போட்டுவிட்டு மாறுபாடாக வருகின்றது என்னை ஏமாறச் செய்யவேண்டும் என்பதற் காகவே இருக்கவேண்டும் என உணர்ந்து, கபடமாக இருக்கிறது என்று தமிழறிவாளைப் பார்த்துப் பழித்துப் பாட நாவெழாமல், விறகு தலையனான நக்கீரர்

கலித்துறை

கருவிழித்தவிழிக்கணையால் வெய்யகாமனையன்
றுருவழித்தவிழியதுவோ விலங்குவமையில்லாக்
குருபதத்திளங்கொங்கை மின்னாளிடங்கூடவின்று
பருகவிதித்திலனே வெய்ய காமப்பசிதனக்கே.

என்று சொன்ன கவியைக் கேட்டுத் தமிழறி மடந்தையும், இவன் நம்மைப் பார்த்து அறிந்து கொண்டு, இவ்வளவு உடைமையுடன் பாடினான் என்று மகிழ்ச்சி அடைந்தாள். பின் அதி சீக்கிரமாய் பெண் யானை தந்தக் கட்டிலின் அருகே முகனையாக வந்து இசையறிவாளை மேலே உட்காரவைத்து விட்டு, தான் கீழே இருந்து கொண்டு வெற்றிலை மடித்துக் கொண்டிருந்தாள்.

இதனைக் கண்ட விறகு தலையனான நக்கீர தேவரும் இவள் இன்னும் கபட மார்க்கமாக வெற்றிலை மடித்துக் கொண்டி ருந்தால் எனக்கு தெரியாதோ? என்று மனதிலே எண்ணிக்கொண்டு, வெற்றிலை மடித்து எடுத்துக் கொண்டுபோய், கீழே உட்கார்ந்து வெற்றிலை மடித்துக்கொண்டிருந்தவள் கையிலே கொடுக்கப் போனார்.

அதைத் தமிழறிவானவள் கண்டு இவன் நம்மை அறிந்தல்லவோ, நம்முடைய கையில் வெற்றிலைப் பாக்கு கொடுக்க வருகிறான் என்று எண்ணிக்கொண்டு அவர் முகத்தை ஏறப் பார்த்து தமிழறிவாள் சொல்லுவாள்,

நான் ஒரு கவி சொல்லுகிறேன். அந்தக் கவிக்கு பயன் சொன்னீராகில் உம்முடைய கையிலே வெற்றிலைப் பாக்கு வாங்குவேன். இல்லாமல் போனால் வாங்குவதில்லை என்று கூறினாள். அதற்கு நக்கீரதேவர் கூறுவார். நீ

சொல்கிற கவிக்குப் பயன் சொன்னாலாகுது. சொல்லாமற் போனால், நான் உனக்கு ஆறு மாதம் ஊழியம் செய்கிறேன் ஒருவேளை நீ தோற்றால் என்ன செய்யலாம் சொல் பெண்ணே என்றார்.

அதற்குத் தமிழறிவாள் சொல்லுகிறாள். ஒருவேளை நான் தோற்பேனாகில் தேவரீர் சொல்கிறபடி கேட்கிறேன் என்றாள். அது கேட்டு நக்கீரர் நீ சொல்கிற கவியைச் சொல்லும் பெண்ணே என்றார். அப்பொழுது தமிழறிவாளும் இரண்டு கட்டிலுக்கும் நடுவே பூந்திரையிடுவித்துக்கொண்டு, தமிழறியும் மடந்தை என்கின்ற வேடத்துக்கு உண்டான ஆபரணங்களை எல்லாம் பூட்டிக்கொண்டு, பட்டு பட்டாவளி உடுத்திக் கொண்டு அளகத்துக்கு[1] முல்லை அணிந்து, கைகளுக்குப் புனுகு சவ்வாது இட்டு, கொங்கைகளுக்கு குங்குமம் கஸ்தூரி அணிந்து கொண்டு, மார்புக்கு கண்டசரம் முத்து மாலை அணிந்து, காதுக்கு கொந்தளமணிந்து[2], கைக்கு அஸ்தகடகமிட்டு[3], காலுக்குச் சிலம்பு அணிந்து, அரைக்கு ஒட்டியாணமணிந்து கொண்டு இசையறி வாளை அரண்மனைக்கு அனுப்பிவிட்டுத் தான் கட்டிலின் மீது அமர்ந்து கொள்ள, ஆலவட்டம் வீச, உபய வெண்சாமரை வீச சர்வ பூஷணாலங்கிருத மாகவே இருந்து கொண்டு விறகு தலையனான நக்கீர தேவருடனே வாக்கு வாதம் பண்ணினாள்.

---

1. அளகம் – கூந்தல், 2. கொந்தளம் – குண்டலமாக இருக்கலாம், 3. அஸ்தகடகம் – கைவளையல்,

வெண்பா

ஐயஞ்சிருபத்தஞ் சேரிறவேரென்பறினும்
வெய்யமதனைந்துகணை மேல்வரினுந் - தையலாள்
கையஞ்சறியாத காளைதோள் சேர்வளோ
மெய்யஞ் சறப்பெற்ற மின்.

என்று சொன்ன கவிக்கு, நக்கீரர் தன் அருகிலிருந்த அஞ்சறைப்பெட்டியைத் தட்டிக் காண்பிக்க அதற்குத் தமிழறிவாள் இது யூதிபாஷையைப்[1] போல் இருக்கிறது. விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்றாள். அதன் பொருளாக நக்கீரர் கூறுவதாவது, ஐயஞ்சிறு பத்தஞ்சாவது, காடுபடுவதஞ்சு, நாடு படுவதஞ்சு, நகர்படுவதஞ்சு, மலைபடுவதஞ்சு இவைகளுக்குப் பயன் காடுபடுவஞ்சாவது அரக்களி செந்தேன் அணிமயிலின் பீலித்திருக்கற்ற நம்பியோடைந்து, கடல்படுவதஞ்சாவது, செந்நெற் சிறுபயறுஞ் செவ்விளநீர் கன்னற் கதலியோடைந்து, நகர் படுவதஞ் சாவது கண்ணாடி பித்தன் கருங்குரங்கு காட்டானை மண்ணாளு வேந்த னோடைந்து மலை படுவதஞ்சாவது மாணிக்கம் பச்சை வைடூரியம் நீலம் ஆணிக்கனக மோடைந்து துணையஞ்சாவது முல்லைய சோகு முழநீலஞ் செண்பகப்பூ அல்லிமுளரி யோடைந்து, கையஞ்சாவது எண்ணெழுதலிலை கிள்ளல் பூத்தொடுத்தல் பண்ணமைந்த யாழி னோடைந்து. மெய்யஞ்சாவது கொட்டாவி நெட்டை குறுகுறுப்பை கூன்குருடு தட்டிவிழுதவோடை

1. யூதிபாஷை – சைகை.

இந்தப்படியென்று நக்கீரர் பொருள் விடுத்த பின்பும் தமிழறிவாள்

வெண்பா

பாய்ச்சிமறித்திடுவார் பாதமே நான்குடையார்
வாய்ச்சகனல்புகுந்து வாழ்ந்திருப்பார் - வீச்சிப்
படைவராதார்தங்களுக்குப் பாரின் மேற்காணா
அடைமாவு மல்ல வது.

என்று சொன்னதற்கு நக்கீரர்

வெண்பா

தங்கைபலகைவச்சடியிற் கால்களொரு நான்குளதாம்
பைம்பொர்க்களமேறிப் பாய்ச்சுதலா - லெம்பெரிய
மாவல்ல நல்ல மாக்காலேமா நிலமன்
பூவலருங்கோதாய் பொருள்.

என்று பொருள் கூறியபின், மேலும் தமிழறிவாள்

சந்த விருத்தம்

அங்காடி கொள்ளப்போ யானைகண்டேன்
அணி நகரமன்றினிலே சேனைகண்டேன்
கொங்காளுமுத்தரசர் தம்மைக் கண்டேன்
கொடிக்கரும்பெரிமாவுங் கூடக் கண்டேன்.
அங்கொருவரெதிர்நின்று வெட்டக்கண்டேன்
அதுகண்டுயான்றலையைத் தாழ்த்தலுற்றேன்
இங்கிதனையின்னதென் றியம்புவோர்க்கே
எதிரில்லையிப்புவிக்கு ளென்றவாறே

இந்தக் கவிக்கு நக்கீரர் கூறிய பொருள்,

சந்த விருத்தம்

எதிராங்கமன்றினிலே யேறக்கண்டேன்
எழுத்தரியதேமாவு மனிதர்கண்டேன்
அதிராங்கமாயிருவ ராடக்கண்டேன்
அவ்விருவரெதிர்நின்று வெட்டக்கண்டேன்
சதுரங்கமிதுகாணும் வேறொன்றல்ல
தார்குழலேதீதலையைத் தாழ்த்தலேனோ
விதிரரங்கமுடையதொரு மானேகேளாய்
வீணருக்கும் வேந்தருக்கும் வேலைதானே.

என்ற பொருள் விடுத்த பின்பு பின்னையும் தமிழறிவாள் சொன்னதாவது,

கவி

அக்கரமுமெழுதவொண்ணா வாய்மையாளர்
ஆவின்பின்னே திரிவா ரதுவுமன்றி
சக்கரமும் வலம்புரியுந் தரித்தேநிற்பார்
தாமுரலிற்கட்டுண்டு தயங்காநிற்பார்
மிக்கதொருவடம்புனைவர் வெண்ணெயாடி
வெற்பெடுத்து மற்பொருது வேலைசூழ்வார்
திக்கெட்டும் புகழ்படைத்த தேவேகேளாய்
திருமாலுமல்லவிது செப்புவீரே.

இதற்கு விறகு தலையனான நக்கீர தேவர்

குன்றாத மொழியுடைய வாய்மையாளர்
கோவின்பினேதிரிவார் கோபாலரல்ல
ஒன்றாகக்கடல்கடைந்து வெண்ணெயாடி
யுரலோடேகட்டுண்டு வுழவா நிற்பார்
மன்றாடி மலையெடுத்து மல்லுப்போந்து
மற்பொருதி வெற்பெடுத்து சொக்கிப் பூண்டார்
சென்றாடுமுறையூரிற் றேனே கேளாய்
திருமாலுமல்லவிது செக்குத்தானே.

என்று பொருள்விடுத்த பின்பு பின்னையுந் தமிழறிவாள் சொன்ன கவி,

படிமுழுதுந்தரித்தங்கே மன்றுள்ளாடிப்
பத்தருமுத்தருமங்கே பரிந்துநாடித்
திடமுடையநான்முகனு மரியுந்தேடித்
தேவரெல்லாம்போற்றரிய திங்கள்சூடி
வாரணியுமுலைமார்பு வராங்கம்போலே
வடிவுடையதிருமேனி தழும்புபட்டும்
படிமுழுதுமாளுவிக்கும் வல்லர்தாமே
பரமனார்தானுமல்ல பகருவீரே.

இதற்குப் பொருளாக நக்கீரர் கூறிய கவி,

வடிவுடையாற் பிறையணிவார் வணிகரெல்லாம்
வழிபடுவார்நாடோறு மனிதர்காண்
அடிபடுவார் திருமேனி தழும்புமேற்பார்
அரிமையார் தகவரது காலமன்றிக்
குடியுடனுடன் மன்னர்தங்கண் முன்னேநிற்பர்
கந்தனென வருபவரை மாற்றுவிப்பார்
உலகமுழுது மாளுவிக்க வல்லர்தாமே
பரமனார் தானுமல்ல பணத்தினாரே.

என்று சொல்ல பின் தமிழறிவாள் சொன்ன கவி,

கட்டியவன் கரையாற காலபலமேயுடையார்
இட்டதே யாமெதனிலே யெய்திய தாமரையும்
கொட்டியு நெய்தலுமே கூட முளைத்திடுமே
யிட்ட தமிழ்க்கரசே யேரியுமல்ல.

இதற்கு நக்கீரர் பொருள் சொன்ன கவி,

கால்வழியே நூலோடிக் கரைகள் சேர்த்துக்
கற்பராய்ப்பல்லிட்டுப் பஞ்சுவைத்துப்
பரவுதல்போல் நூல் தொடுத்து இழைதிருத்திப்
பசுமையாயுடைவிட்டுப் பிணையல் செய்து

பூவலரும் நெய்துலகிற் கொட்டிவிட்டுப்
பொருந்தியதாமரையும் பூத்தேநிற்பர்
வேல்பொருதுங் கண்ணாளே யேரியல்ல
மேகலையென்றேயிதனை விளம்புவாரே.

என்று அவர் சொல்லியதும், தமிழறிவாள் சொன்ன கவி,

கானகத்திருந்துபோந்து கைகளாற்குத்துமுண்டு
தானகக்கூடந்தன்னிற் றண்பனிநீருமாடி
மேனிலத்தவளங்கொண்டு வீதியில்வருவாரங்கே
ஆனையுமல்லகண்டீ ரறிந்திடீரரசர்கோவே.

என்று சொல்ல நக்கீரர் பொருள் சொன்ன கவி,

தானும்பொற்கூடந்தன்னி றன்மையிற்குத் துமுண்டு
தேனுடன் பாலுநெய்யுந் தெவிட்டநல்லமுது செய்யு
மாதுவேல்விழியினாலே மாநிலத்தோர்கட்கெல்லாம்
ஆனையுமல்லகண்டீ ரருங்கலைதானே யென்றார்.

என்று சொல்லப் பின்னும் தமிழறிவாள் சொன்ன,

வெண்பா

அக்கடாபோகக்கண் டாறிரண்டிலொன்றையுண்
டிக்கடாவிடா யிருப்பாரை - யொக்கிடா
ஒன்னார்புரத்தை முனிந்தாரேயந்நாளில்
முன்னான்கிலொன்றுடையான் முன்.

என்று சொல்ல, இதற்கு நக்கீரர், பாண்டியன் முன்பு நரியை பரியாக்கினதென்று பொருள் கூறினார். பின்னர் தமிழறிவாள் மறுபடியும் சொன்ன கவி,

நீரிலானது தானவைமூன்றுள
நெடியகானில் விளக்கொரு மூன்றுள

ஊரிலாடவும் பாடவுங்கொட்டவு
மொன்றிலொன்று பேசையாராமென்ப
சேரவாங்கு தன்னுடன் கூடவே
தெற்குமாமுனி தன்னையுமக்கவே
பாரின்மீது இயல்வல்லார்க்கிது
பன்னிரண்டு வருஷம்பகருமே.

அதற்கு நக்கீரர் பொருள் சொல்லுகிறார் நீரில் மூன்றாவது மகரம் - மீனம் - கர்க்கடகம், கானில் மூன்றாவது மேஷம் - ரிஷபம் - சிங்கம், ஊரில் மூன்றாவது ஆறாவது துலாம், பாடுவது - மிதுனம், கொட்டுவது - தேள், பேதையாவது - கன்னி, தனுசாவது- வில், தெற்கு முனியாவது - கும்பம் என சொல்லினார். பின்னும் தமிழறிவாள் சொன்ன கவி,

வருவார் கூடுபுகுவார் வாய்கூப்பிநிற்பார்
பருவாரெல்லாந்தானே பரிந்திருப்பார் - நீரிற்
சுழுத்தேறுபாலித் துறைநாடாசொல்லாய்
எழுத்தாணியல்ல விது.

இதற்குப் பொருளாக நக்கீரர் கூறிய வெண்பா

வருவார் கூடுபுகுவார் வாய்கூப்பி வந்து
பருவாரெல்லாந்தானே பரித்துழல்வர்-சீரெல்லாங்
கச்சிருக்குங் கொங்கைக் கருங்குழையீர்கார்வண்
ணித்திரையினிற்காணி லுப்பு.

பின்னும் தமிழறிவாள் சொன்ன வெண்பா,

துய்யஞ்சுபாணந் தொடுத்தான் வேளிப்பொழுதே
வெய்யஞ்சுவிட்டாலு மியான்வேண்டேன் - மெய்யாக
கையஞ்சுடையான் கதிர்முகத்திலொன்றுடையான்
மெய்யஞ்சுடையான் விளம்பு.

இதற்கு நக்கீரர் பொருள் சொன்ன வெண்பா,

நினைக்குமாவிந்த நீள்பசலைசூதம்
அனைத்துணர்வுமாற்று மசோகந் - தனித்திருந்து
முல்லைகிடைகாட்டு மானேமுழுநீலங்
கொல்லுமதனம்பின் குணம்.

என்று சொன்னது கையஞ்சுடையானாவது, தேரின் வண்மை இறை இம்மை நெருப்புக்குறி நுண்மை யோடைந்து கதிர் முகத்திலொன்றாவது சூரியனைப் போல் ஒளியுடை நெட்டையுடல் முறித்தல் வெம்பி கற்றாமையோடைத்து என்று சொல்லி தமிழறி மடந்தையினைப் பார்த்து நக்கீரர் சொல்கிறார் நீ சொன்ன கவிகளுக்கு எல்லாம் நான் பயன் சொன்னேன். இனி நான் ஒரு கவி சொல்லுகிறேன் அதற்கு நீ பொருள் சொல்வாயாக என்று கூறி தமிழறிவாளுக்கு நக்கீரர் சொன்ன,

வெண்பா

பஞ்சவர்கள்பேரும் வடிவுமவர்குணமும்
தஞ்சமுடனேயதனைச் சாற்றவே - நெஞ்செதிரே
யின்னவகையி னடைவேந்தனையுஞ்
சொன்னார் புலவர் தொகுத்து.

இதற்குத் தமிழறிவாள் பொருள் சொன்னது. பஞ்சவர்கள் பேரானது பிருதிவி-அப்பு-தேயு-வாயு- ஆகாசம், வடிவாவது மெய்- வாய்-கண்-மூக்கு-செவி, குணமாவது சத்தம் - பரிசம்-ரூபம் - சாம் - கந்தம், உணர்வாவது காண்டல்-கேட்டல் - உண்ணல்- உடுத்தல்- உயிர்த்தல் என்று சொன்னாள்.

பின் மீண்டும் நக்கீரர் சொன்ன கவி,

படிதனையிறுகப்பற்றிப் பருநிலமதிரக்குத்தி
யுடல்தனையன்றுபாயக் கியங்கையும் புக்கிநின்று
கொடிபலசூழ்தலாலுங் குமுறியேவளைத்தலாலும்
வடிவுடைமாதேகேளாய் மதகரியல்லகண்டீர்.

என்று சொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்ன,

வெண்பா

காற்றில்விளைவாகுந் தரணியின்மீதினிலே
மாற்றவரைவெல்ல வகையுளதே - சேற்றாடும்
ஆற்றாமையாலிந்த மம்மடுவிற்றான் கவிழ்க்கும்
ஊற்றாலே கண்ணீ ரிருந்து.

என்று சொல்லி தமிழறிவாள் விறகு தலையனான நக்கீரரைப் பார்த்து சொன்னதாவது,

வெண்பா

மன்னுகலைக்குரிய வல்லீரேயாமாகிற்
பன்னும் விறகுதலைப் பாவலே - யின்னமுநீ
சொல்லுதியோ வென்றுரைப்ப சொல்லுவேன்
சொல்லுமென்றால்
வல்லமையான் செந்தமிழின் மான்.

என்று சொல்லிய உடனே நக்கீரர் சொன்னதாவது,

கவி

ஞாலமிகுத்திருக்கு நல்லகரியமேனி
நானிலத்திலறியாத தேசமில்லை
காலுமுண்டு காசினியில் நடக்கமாட்டார்
கருதரியசிறகுமில்லை பறந்தேபோவார்

சீலமுடன்மைந்தரையும் பெறுவார்கண்டீர்
சிநேகிதர்வந்தடுப்பார்கள் சேரவொட்டார்
ஆலமுண்டகண்டத்தா ரருளினாலே
ஆராய்ந்தேயிப்பொருளை யறிந்திடாயே.

என்று கூறத் தமிழறிவாள் சொன்ன கவி,

தேங்குபாலிலுப்பைபன்னை வடவாலத்தீ
செய்யமாதனை கொய்யா தின்றேசாலத்
தாங்கிளரிக்கோபுரங்கள் சாலைசோலை
சாளாங்குதிருக்கோயிற் றுலங்குவிக்கும்
ஆங்கிவணிபணியாக வினங்களோடும்
அணிதோப்புக் காவனங்க ளடுத்துவாழும்
மாங்கனிக்குத் தூக்கித் தலைகீழாய்நிற்கும்
வவ்வாலென்றிதன் பேரை வகுக்கலாமே.

என்று சொல்ல நக்கீரர் சொன்ன கவி,

படைதனிற்சென்றவையருளத் தொலைத்துநேரா
பாவலரையறுத்தவென்று படையே கூடும்
குடமுடைய பெரிதான குதிரையேறும்
கோட்டைகொள்ளுங் கொக்கரிக்குங் கொள்ளையாடும்
அடலுருவவேலெரிந்த பகையைத் தீர்க்கும்
ஆராளிபுவியாளும் மாற்றானல்ல
விடைமிழத்தசிவனருளாற் றெரிந்துநன்றாய்
விமரிசையாயிக்கவியை விளம்புவாயே.

என்று கூறத் தமிழறிவாள் சொன்ன கவி,

செந்திருக்க பூச்சூடிக்கனலுமேந்தி
திருக்கரத்தில் மானுமொரு மழுவுமேந்தி
விந்தைதனையிடப்பாகந் தனிலேவைத்த
விமலரதுதிருமகனார் விபரத்தோடு
கந்தருக்குமுன்பிறந்த தங்கைமைந்தன்
கரிகரியாம்விகடவிட தடக்கமலபாதன்
தந்திமுகனேறுபெருச் சாளியென்றே
தாரணியிலவர்க்குலங்கள் சாற்றலாமே.

என்று சொல்ல நக்கீரர் சொன்ன கவி,

வீரமுடனாடனைத்து முடையார்சால
விடையிலுகந்தேருவார் சிவனாரல்ல
பாருலகில்புல்லருக்கு முதவியாவர்
பண்பானபூமுடிப்பார் பாவையல்லர்
தாரணியிலவரவர்தந் தொழில் செய்விப்பார்
சகலகலைநிறமுடையோர் பறையோரல்லர்
சீருலகிலிவர்யாரோ தெரிந்துகொண்டு
சேயிழையேயிப்பொருளைச் செப்பிடாயே.

என்று சொல்லத் தமிழறிவாள் அதற்குப் பொருள் சொன்ன கவி,

கருதலர்கள்பகைநடுங்க வசுரர்மாளக்
கடகமுடைபடை துரகக் கரிதோர்மாளக்
பரிதியொளிவாமினிய கம்பத்தானும்
பாவலருமெம்மையுமா கரர்பலரும்வீழ
மருமலரைச்சிரமறுத்த திகிரிவேந்தன்
மால்தமக்குமருகனென்னும் வள்ளிபங்கன்
செருவில்வருமசுரர்குல காலனெங்கள்
செந்திவடிவேலரது சேவலாமே.

என்று தமிழறிவாள் சொல்லிய பின், நக்கீரர் சொன்ன கவி,

தும்பியுண்ணாப்பூமலருங் காயுமுண்டு
சோறுமுண்ணார்பசியாது வயிறுமுண்டு
வெம்பியதோர்பழம்பழுக்கு மெடுப்பார்தின்னார்
விடுமுண்டுசம்பதனால் மேய்ந்தநல்ல
நம்பியதோரவரவரே நம்பமாட்டார்
நல்லநல்லமுறைநிற முடையார்நளினகாமன்
அம்புசெறுகும்பமுலை மாதேகேளாய்
யாராய்ந்தேயிப்பயனை யறிந்திடாயே.

என்று சொல்ல தமிழறிவாளும் பொருள் சொன்ன கவி,

பன்னுமொருமச்சகத்தி முனியேகூறப்
பரிமளகந்தியுந்தாங்கிப் பகைமையோட்ட
தன்னியங்கண்டம் முனியும் தழுவிச்சாரச்
சந்தனுராஜனுதித்த தகைமையாலே
அன்னவர்கள்குலத்தில்வருங் குந்திதேவி
அருள்புதல்வர்காந்தாரியளித்த சேயன்
சொன்னதுரியோதனனு மைவர்கூடச்
சூதாடித் தோற்றதுவுஞ் சொக்கட்டானே.

என்று தமிழறிவாள் சொல்ல பின்பு நக்கீரர் சொன்ன கவி,

சிற்றாடையுடுத்திருக்குஞ் சிறுமியல்ல
சிறந்தபூணூலணிந்திருக்கு மறையோனல்ல
ஒண்கமுத்தில்மணியுடையார் ரிஷபமல்ல
உத்தமியேபலர்தொழுவார் சுவாமியல்ல
சித்தாரப்புரமெரித்தார் முன்னேநிற்பார்
சிறந்தபணிவிதைக்குவாத் தீயரல்லா
பொற்பாதம்பூண்டிருக்குந் திருமாலல்ல
பூவையேயிக்கதையைப் புகலுவாயே.

என்று சொல்ல தமிழறிவாள் பொருள் சொன்ன கவி,

மந்தாரம்பிச்சை முல்லையறுகுரங்கை
மதியுடனேகொன்றை தும்பைமலருஞ்சூடி
எந்தாயம்பிகையாளை யிடத்திலேந்தும்
ஈசரதுதிருக்கோயின் முன்னேநிற்கும்
கொந்தாருமலராடை யணிந்துக்கொண்டு
குவலயமென்றிருவிழாக் கொள்ளுங்கண்டீர்
ஐந்தானகாரியமும் மறிந்தகோவே
அரியகொடிக்கம்பமென்றே யறையலாமே.

என்று தமிழறிவாள் சொல்ல, அதுகேட்டு விறகு தலையனான நக்கீரதேவர் இந்த பிரசங்கத்திலே பொழுது விடிந்து போகும் என்று எண்ணிக் கொண்டு அத்தமிழறிவாளைப் பாாததுச் சொன்னதாவது,

வெண்பா

ஆய்ந்தசயனத்தி லாயிழையேயன்றியே
போந்தவணிகிடக்கப் போகுமா – வாய்ந்த
முன்னான்கு முலையு முழுமதியுமன்றியே
யென்னான்கு மென்னசெய்வேன் யான்.

என்று விறகு தலையனான நக்கீரர் சொல்லக் கேட்டு தமிழறிவாளுக்கு மன்மத விகாரம்[1] உண்டாகித் திரையை வாங்கிப்போட்டு விறகு தலையனைப் பார்த்தாள். பார்த்தபோது நக்கீரர் பின்னுந் தமிழறிவாளைப் பார்த்து சொன்ன தாவது.

வெண்பா

பொன்னி னழகும் புவிப்பொறையு மேவாய்ந்து
மின்னிடையும் பெற்றதொரு
மெல்லிநல்லாய்–மன்னவர்கள்
தோராவழகுடையான் றோளின்மேலேயணைந்து
சேராத வாறுதனைச் செப்பு.

என்று சொல்லக் கேட்டதும், தமிழறியும் மடந்தை அதிக மகிழ்ச்சியாய் மன்மதவிகாரம் பொறுக்கப் போகாமல் எழுந்திருந்து வந்து தன்னைக்கூடச் சொல்லி, விறகு தலையனான நக்கீர தேவரைக் கட்டி அணைத்துக்கொண்டு சொன்னதாவது,

---

1. மன்மத விகாரம் – காதல் வயப்பட்டு

வெண்பா

கையிருக்கக் காம நெறியிருக்கக் காதலுடன்
மெய்யிருக்கக் கண்டேன் விழிபெருக - மொய்குழலாள்
பாகுஞ் சுவையும் பசுந்தேனு முப்பழம்போ
லாகுமுறக் கூடென்றா ளாங்கு.

இப்படி சொல்லிக் கட்டிக் கொண்டவுடனே நக்கீரதேவரும் கலக்கமுற்று நாம் இவளைக் கூடினால் சங்கப்பலகையும் பொறாது. நாம் இப்போது இந்தக்காரியம் பண்ணினோமேயாகில் நான்கு யுகமாக இருந்துவருகிற சங்கத்தாரும் நகைப்பார்கள். ஆகாயவாணி, பூமிதேவியும் கூட நகைப்பர். உலகத்திலே அபகீர்த்தி[1] உண்டாகும். இவைகளும் அன்றி இவளை விறகு தலையனுக்கே அல்லவா கட்டிவைக்கிறேன் என்று சபதம் செய்துள்ளோம். அப்படியிருக்க நாம் இவளைக் கூடுகிறது நீதி அல்லவே என்று எண்ணியவராய், ஓடின மனதைத் திருப்பி, தமிழறிவாள் தம்மைக் கட்டிக்கொண்ட கையைக் கவியினால் விடுவிக்க வேண்டுமென்று எண்ணிச் சொல்லுவார்,

வெண்பா

ஒருவனொருத்தியா யூரில்லாவூர்புக்
கிருவர்க்கிருவரையும் பெற்றாள் - இருவரிலே
மூத்தானைக் கொன்றான் பகைவன்தா தீயிட்டான்
றாதைவருகளவுந்தான்.

என்று சொன்ன மாத்திரத்திலே தமிழறிவாள் நக்கீரரைக் கட்டிக்கொண்டிருந்த கையை விட்டு,

1. அபகீர்த்தி - நிந்தை, இருக்கின்ற புகழுக்கு களங்கம் உண்டாதல்

கட்டிலை விட்டிறங்கி அப்பாலே போய்ச் சுற்றிலும் பனி நீரிறைத்து மயில் விசிறியை எடுத்துக்கொண்டு, அந்த விசிறிக்குப் பனிநீரைத் தெளித்து நக்கீரருக்கு எதிரே நின்று, விசிறிக் கொண்டு அவர் சொன்ன கவிக்குப் பொருள் சொல்லியது,

ஒருவன் ஒருத்தியாவது சூரியனுக்கு ரதசாரதி யாகிய அருணன் என்பவன் ஒருநாள் சூரியனைப் பார்த்து, நான் தேவலோகம் பார்த்து வருகிறேன் என்று சூரியனிடத்திலே விடைபெற்றுக்கொண்டு தேவ லோகம் புறப்படுகிறான்.

முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத் தெண்ணாயிர ரிஷிகள் புடைசூழ, மேனகை, ரம்பை, ஊர்வசி என்று சொல்லப்பட்ட தேவலோகப் பெண்கள் நடனம் ஆட கொலுவீற்றிருக்கிற தேவேந்திரன் சபைக்கு அருணன் ஒரு பெண் வடிவாய் வேடங் கொண்டு சென்றான். அப்போது இந்த பெண்ணைக் கண்டு தேவேந்திரன் மோகித்துக் கூடினான். அந்தக் கூடலால் ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளையினை எடுத்துக்கொண்டு திரும்பவும் அருணன் சூரியனிடத் திற்கு வந்தான். சூரியன் அவனைப் பார்த்து இந்த பிள்ளை உனக்கு ஏதென்று கேட்டான்.

நான் பெண் வேடங்கொண்டு தெய்வ லோகத் திலே தேவேந்திரன் சபைக்குப் போயிருந்தேன். அங்கே தேவேந்திரன் என்னைக் கண்டு மோகம் கொண்டு என்னுடன் கூடினான்.

அப்போது பிறந்ததே இந்தப் பிள்ளை என்று கூறினான்.

இதனைக் கேட்ட சூரியன், அருணனைப் பார்த்து அந்த பெண் வடிவத்தை நானும் பார்க்க வேண்டுமே என்றான். நல்லதென்று சொல்லி, முன் எடுத்த பெண் வேடத்தை மீண்டும் பெற்றான் அருணன். அது கண்டு சூரியனும் மோகம் கொண்டு கூடினான். அப்பொழுது ஒரு பிள்ளை பிறந்தது. அந்த இரண்டு பிள்ளைகளிலே மூத்த பிள்ளை வாலி, இளைய பிள்ளை சுக்ரீவன். இந்த வாலியைக் கொன்றவர் இராமர். இராமருக்குப் பகையாளி இராவணன் நகராகிய இலங்கைப் பட்டணத்தைத் தீயிட்டவன் அனுமான்.

அனுமானுக்குத் தந்தை வாயு, அந்த வாயுவானது வருமென்று, அந்த காற்று வருந்தனிலும் நில்லென்று சொன்னீர்கள் எனத் தமிழறிவாள் சொல்லிக் கொண்டு இருக்கிற வேளையில் ஒரு பல்லி சொல்லிற்று. அதை நக்கீரர் ஆண்டு பார்த்து நன்றாய் இருக்கிறது. நாம் வந்த காரியம் வெற்றிபெறும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறபோது, தமிழறிவாளும் அந்த கெவுளியை யாண்டு பார்க்குமளவில், அது தனக்கு மரணம் சொல்கிறது என்று அறிந்துகொண்டு, நக்கீரரைப் பார்த்து அந்த கெவுளி[1] என்ன சொல்கிற தென்று கேட்டாள்.

அதற்கு நக்கீரர் இனி ஒரு கண நேரத்திலே சாவு சொல்கிறது என்று சொன்னார். அதனைக்

கேட்ட தமிழறிவாளும் அப்படி பிராப்தியிருந்தால்[1] தப்புகிற தில்லை. உமக்கு அந்த கெவுளி [2] என்ன சொன்னால் தான் என்ன நீ சொல்லுகிற கதையை சொல்லும் என்றாள்.

இதுகேட்டு நக்கீரர் சொல்லுவார். நல்லது நான் ஒரு கவி சொல்லுகிறேன். அந்த கவிக்குப் பொருள் சொல்ல வல்லவியோ என்றார். அதற்கு தமிழறிவாளும் நீ அத்தனை வல்லவரோ என்றாள். அதனாலென்ன நான் தோற் பேனாகில் என் குடுமியையும், பூணூலையும் அறுத்துப் போட்டுவிட்டு, உன் வீட்டிலே வெள்ளாட்டிப் பையலாயிருந்து[3] கொண்டு உனக்கே பணிவிடை செய்கின்றேன். நீ தோற்றால் அதற்கு என்ன சொல்லுகிறாய் என்று கேட்டார்.

அதற்கு அவள் நான் தோற்றதேயுண்டானால் என் அரண்மனையும் இடித்துவிட்டு, தமிழறிவாள் என்கிற என் பெயரையும் மாற்றிவிட்டு, என் தலையையும் சிரைப்பித்து கழுதையின் மேலேற்றி ஊர்வலங் காட்டி ஓட்டிவிடுமென்றாள். அதற்கு நக்கீரர் சொன்னது. நீ தோற்றதேயுண்டானால் எனக்குப் பிடித்தமானவன் எவனோ, அவன் எந்த நீச்சனுக்காகிலும்[4] உன்னைக் கட்டிவைப்பேன் என்றார். நல்லது அப்படியே ஆகட்டும் என்றாள் தமிழறிவாள்.

1. பிராப்தி – பேறு. 2. கெவுளி – பல்லி. 3. பையல்–பையன். 4 நீச்சன் – நீசன், ஈனன்

அப்போது நக்கீரதேவர் இலக்கண காவியங்களினாலே வெல்ல அடியில் கண்டதை ஒரு வெண் பாவாக பிணைத்துக்கொண்டு கண்ட சுத்தியாக[1]

நச்சுத்தேரேறி நடுக்காட்டில் வேடுவச்சி
பச்சைக் கொடியாட நின்றாளே - இச்சித்தே
மேல்வனங்கவர்ந்து மின்கொண்டு போகின்ற
மூலபலங்கண்டாய் மொழி.

என்று சொன்ன மாத்திரத்திலே இந்தக் கவியைக் கேட்டு தமிழறிவாளுக்கு தான் கற்ற பஞ்ச லட்சணத்திலும், மற்று முண்டான நூல் வழியெல்லாம் ஆராய்ந்துப் பார்த்து ஒன்றும் தெரியாததினாலே விசாரப்பட்டு இத்தனை காலம் தமிழறியும் மடந்தை என்று பேர் பெற்று யாரும் எதிரில்லாமல் புகழ் பெற்றிருந்தோம். இந்த வெண்பாவிற்குப் பொருள் தெரியாமல் போச்சுதென்றால் தமிழறியும் மடந்தை தோற்றாள் என்று உலகத்தினர் இகழ்ச்சியாகப் பேசுவார்களே என்று வெகு கிலேசத்துடனே[2] நக்கீரரைப் பார்த்துத் தனக்கு ஒன்றும் தெரியாத படியினாலே மொத்தார்த்தமாக[3],

வெண்பா

உண்டிக் கொடுத்தார்க்குயிர் கொடுத்தாரெண்ணாது
வண்டார்குழலாள் மகிழ்வன்றி - உண்டி
உண்டாருஞ் செத்தாரு முண்டிருந்தாருண்டீர்
உண்டானரகம் புகார்.

---

1. கண்டசுத்தி -ஆசுகவி, கண்ட காரியத்திற்குப் பாட்டு சொல்ல வல்லபம். 2. கிலேசம் - அச்சம், கவலை, துன்பம். 3. மொத்தார்த்தமாக - மலுப்பலாக.

என்று சொல்லிவிட்டு, நிலைக்கண்ணாடியை உடைத்து, உடைந்த கூரிய கண்ணாடித் துண்டினை எடுத்து தன் வயிற்றில் குத்தி கீறிக்கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டாள். பொழுது விடிந்தது நக்கீர தேவரும் தமிழறிவாளை மூடிவைத்து, அவள் போகின்ற கள்ள வழியாகப் புறப்பட்டுச் சென்று, விறகு தலையனிடம் வந்து தம்முடைய வேடத்தை களைந்துப் பச்சைநிற வேட்டி பாகை கட்டிக் கொண்டு கடுக்கண் மோதிரம் அணிந்து கொண்டு, விறகு தலையனுக்கு, அவன் எப்போதும் உள்ள வேடத்தைப் போட்டு அவனை அங்கே இருக்கச் சொல்லிவிட்டு செல்கிறார்.

பாதக்குறடிட்டுக்[1] கொண்டு நக்கீரர் நடந்து போய் சோழ மன்னனைக் கண்டு, அம்மன்னனுக்கு அட்சதை கொடுத்து ஆசிர்வாதம் செய்தார். பின் அச்சோழ மன்னன் இருக்கச் சொன்ன இடத்தில் இருந்தார்.

அடுத்தநாள் காலை, மரகதவடிவானவள், தன் மகள் இரவு விறகு தலையனிடம் சென்றவள் இன்னமும் எழுந்திருந்து வரவில்லையே என்று தன் தோழிகளை அழைத்துக்கொண்டு, அந்த படுக்கையறை வீட்டிற்குப் போய்ப் பார்த்தாள். அங்கே தன் மகள் இறந்து கிடந்தது கண்டு அலறி அடித்துக் கொண்டு விழுந்து, பின் எழுந்திருந்து இப்பேர்ப்பட்ட மகளை இனி நான் எப்படிக்

1. பாதக்குறடு – காலில் அணியும் மிதியடி.

காண்பேன். எந்த பிறவியில் அவளை நான் இனி மகளாக அடையப்போகிறேன் என்று பலவாறு கூறி அரற்றினாள். அப்போது மிகுந்த துக்கத்துடன் தன் மகளின் உடலைப் பார்த்துச் சொன்னதாவது,

வெண்பா

நக்கீரர் சொற்கவிக்கு நாடவிடமன்றியிலே
பொற்கொடியாட் சூத்திரங்கள் போதாமற்-சிற்றிடையாள்
கண்ணாடியாலுயிரைப் போக்கினாள் காரிகையும்
பண்ணாள் தமிழறிவாள் பார்.

பின்னர் மரகதவடிவும், தோழியர்களும், கற்றுச் சொல்லிப் பெண்களும் மற்றுமுள்ள அனைவரும் புறப்பட்டு பெரும் கூச்சலிட்டுக்கொண்டு, சோழ மன்னனின் அரண்மனைக்கு வந்து அவனிடத்திலே முறையிட்டார்கள். அப்போது சோழ மன்னனும் மிகவும் கவலை கொண்டு, மரகதவடிவியை அருகே அழைத்து வந்தவன் யார்? போனவன் யார்? இது எப்படி நடந்தது கூறு என்று கேட்டான்.

அதற்கு மரகதவடிவு சுவாமி யாரோ தெரியாது வெட்டியான் போலே இருந்தவன் ஒரு கட்டு வாழைத்தண்டைத் தன் தலைமேலே வைத்துக் கொண்டு, விறகென்று கூறி அதற்கு விலைகூறி கவி சொல்லிக்கொண்டு வந்தான். அவன் இராத்திரி யெல்லாம் மகளுடனே பிரதிவாதித்துக் கொண்டிருந் தான். நாங்களும் சிறிது நேரம் விழித்துக் கொண்டிருந்தோம்

பிற்பாடு அவரவர் அங்கங்கே சென்று படுத்து உறங்கிவிட்டோம்.

பின்னர் என்ன நடந்ததோ? ஏது நடந்ததோ? தெரியவில்லை. ஒருவேளை அவன் சொல்லிய கவிக்குப் பொருள் தெரியாமல் போச்சுதோ? ஏதொன்றும் தெரியவில்லை. நாங்கள் போய் பார்த்த பொழுது இறந்து போய் கிடந்தாள் என்று கூறினாள் மரகதவடிவு. இதைக் கேட்ட சோழ மன்னன் மிகவும் வருத்தமுற்றுச் சொல்கிறான் முன்பு தங்களுடைய வம்சத்திலே ஒரு புறாவிற்காகத் தன்னுயிரை ஈந்ததும், ஒரு பசுவின் கன்றிற்காகத் தன் மகன் மேல் தேரேற்றிக் கொன்றதுமான பரம்பரையில் இதுபோன்ற ஒரு சம்பவம் நடந்துவிட்டதே. நான் என்ன செய்வேன் என்று மிகவும் மனம் கலங்கி அச்சபையினை நோக்கி

வெண்பா

முற்பழிக்கொன்றாயிரையன்று முறைவருவா
சபத்தேரூர்ந்த பழிக்காகாதே - சொற்பெருமைப்
பழிக்குங்கூந்தல் வனமுலையாள் தன்னுடைய
பழிக்குமென் செய்வேன்யான்.

என்று சோழ மன்னன் சொல்லப் பின்னையும் விசாரித்த அளவில் அந்த சபையிலிருக்கிற நக்கீரரைக் கண்டு அவர் கூறியவற்றை பூராயமாய்க்[1] கேட்டு நிதானித்து, இராத்திரி வந்து பிரசங்கம் செய்தவன் இவரே என்று அறிந்து கொண்டு சோழ மன்னனைப் பார்த்து மரகதவடிவு

1. பூராயமாய் - ஆராய்ந்து.

வெண்பா

கையாற்கொடையான் கதலிவிறகுவிற்பான்
பொய்யானுமெய்ந் நூற்பொருள் காண்பான்-மெய்யாக
மையாரும்வேற்கண் மடமானை மன்னவனே
யையகோ வென்றாரவர்.

என்று சொல்லக் கேட்டு, நக்கீரதேவர் சோழ மன்னனைப் பார்த்து

வெண்பா

பொய்யாத முத்தமிழின்பொற் கொடிக்குச் சூழ்ந்தகொலை
கொய்யாமது மாலைக் கொற்றவனே - மெய்யாக
மையாரும் வேற்கண் மடமானை மன்னவனே
கையாரக் கொல்லினேன் காண்.

என்று கூறக்கேட்டு சோழ மன்னனும் நக்கீரரைப் பார்த்து நீ யாரென்று கேட்க, அதற்கு நக்கீரதேவர் சோழமன்னரைப் பார்த்துச் சொன்னதாவது,

வெண்பா

நாலாயிரத்துத் தொளாயிரமாஞ்சகத்தின்
மேலான நற்கீரெம்பெயர்தான் - வேலால்
உனைந்த புறாவுக்காக வுன்சதையைநேரா
யனைந்தேயறிந்தவனே யாம்.

இப்படிச் சொன்ன நக்கீரரைப் பார்த்துச் சோழ மன்னன் சொன்னதாவது,

வெண்பா

உறவற்றார் போலிவ் வுறையூர்க்குப்புக்கிப்
பொறையறை காணும் பூதலத்திலறையும்
நறைகமழுநற்கீரர் னாக்காலிந்த
விறகுவிற்பதேனோ விளம்பு.

இப்படி கூறிய சோழமன்னனைப் பார்த்து, நக்கீரர்

வெண்பா

கூறுவார்கூறும் பரிசேகுறைவரியான்
வீறுமென்னென்று விடவறியாள் - மாதுடனே
எச்சுவாரெச்சும் எளிதாகுமன்றியிலே
விசுவாசம் வாங்கா தென்மின்.

என்று நக்கீரர் சொல்ல, மன்னனுடைய அமைச்சர் நக்கீரரைப் பார்த்து

வெண்பா

பூவேசிலபறிப்பார் பூணேசிலபாடுவார்
பாலேயடிதலையின் பண்பாகுஞ் - சாகவே
மதுரங்கள்வண்டுண் ணும் மாவேவடுவாம்
இதுதவிரவுண்டோ வியம்பு.

என்று சொல்லவே நக்கீரருக்கு மகாகோபம் வந்தது. இவனோ நம்மைப் பார்த்துச் சொல்லுகிறவன் என்று, அப்போது சோழ மன்னனுக்கு அற்புத வாய்வுண்டு, அந்த வாயு மந்திரவுற்சாடனம் பண்ணி அந்த அமைச்சன் பேரிலே குதிக்கவிட்டார். அதுகண்டு அமைச்சனும் வெட்கி தலைகுனிந்து கொண்டான்.

அதை சோழ மன்னன் பார்த்துப் பயந்து எழுந்திருந்து நக்கீரரை அங்கீகரித்து, உம்முடைய மகிமையைப் பார்க்கத் தக்கினபேர் யாவரென்று நக்கீரரைத் தழுவிக்கொண்டு, நல்ல வார்த்தை களைச் சொல்லி, தேவரீர் தங்கள் அனுக் கிரகத்தினால் தமிழறிவாளை எழுப்பி இரட்சிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டான்.

அப்பொழுது நக்கீரர் மகிழ்வெய்தி அவளை எடுத்துவரச் சொல் என்றார். அப்படியே போய்த் தமிழறிவாளை எடுத்து ஒரு கட்டிலின் பேரிலே போட்டுக் கொண்டு வந்து நக்கீரர் முன்னே வைத்தார்கள். நகரத்தில் உள்ள அனைத்து மக்களும் வந்து புதுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கிற சமயத்திலே நக்கீரதேவரும் தமது கமண்டலத்தால் நீர்கொண்டு வந்து, அபி மந்திரித்துத் தமிழறிவாள் பேரிலேயிறைத்து விட்டு

வெண்பா

> **வீறாயிவளுக்கு மிக்கோரும் வேந்தனுக்கும்**
> **மாறாக நாம்வந்த வாரறியக் – கூறாய்**
> **விழுந்தநிணமுள்ளடக்கி வெள்ளெலும்புமொன்றா**
> **யெழுந்திருக்கவேண்டு மினி.**

என்று சொன்ன உடனே வயிறு பீறுண்டு சரிந்து விழுந்திருந்த நிணமனைத்தும்[1] உள்ளடங்கி ஒன்றாகப் பொருந்தி, தூங்கிக் கொண்டிருந்தவள் தூக்கம் களைந்து எழுந்தது போல், விழித்துப் பார்த்த தமிழறிவாள் கவிக்குப் பயன் சொல்லிக் கொண்டே எழுந்தாள். பயன் சொன்ன விதம் பாரைபாரையென்[2] றெழுந்தாள். அதற்கு நக்கீரதேவர் பூரைபூரை[3] என்றார். அதன் பிறகு அந்தச் சபையினைப் பார்த்து வெட்கித் தலையை தொங்கவிட்டுக் கொண்டு நின்றாள். அப்படி நின்றவளைப் பார்த்து

---

1. நிணம் - மாமிசம். 2. பாரை - ஓர் மீன். 3. பூரை - குறைவின்மை.

வெண்பா

சிறந்தமிழின் றிறமறியமாட்டாமல்
இறந்தனையோ வுன்றனைக் கொன்றாயே - அறிந்த
செந்தமிழின் சோழனுக்குச் சேரவந்துநின்று தொழுஞ்
சொந்தமுன்னாச்சியுடன் சொல்.

என்று நக்கீரதேவர் சொல்லத் தமிழறிவாள் சோழ மன்னனைப் பார்த்து

வெண்பா

நானோபழிபடைத்தேன் நாடாதென்னாவுரைய
தேனார்கமலத் திசைமுகனார்தானே
தலையோட்டிலுள்ளபடி தப்புமோ சொல்வீர்
தலையோட்டிடு மாமுனியே காண்.

என்று தமிழறிவாள் சொல்ல சோழ மன்னன் அந்த வசனத்தைக் கேட்டு, மகிழ்ச்சியடைந்த பொழுது, மீண்டும் தமிழறிவாள், தமிழுக்கு அகத்தியனும், வடமொழிக்குப் புலத்தியனும் ஆகிய இருவருடைய கல்வியையும் அறியும் பொழுது நான் என்னையே ஒழிய மற்றொருவருமில்லை என்றிருக்கவேண்டாம் என்றாள்.

மேலும், கல்வி அதிகங்கண்டு பிரமனானவன் சரசுவதியை நாவிலே தரித்துக் கொண்டார். விஷ்ணுவானவர் மார்பிலே தரித்துக்கொண்டார். ஈஸ்வரன் சங்கத்தின் கீழேயிருக்கிறான் என்று சொல்ல சோழ மன்னன் மிகவும் மகிழ்ச்சியுற்று தமிழறியும் மடந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு நக்கீரர் கையிலே கொடுத்து இவளை

நான் பெற்ற பெண்ணாக வளர்த்தேன். இப்பெண்ணை தேவரீர் திருமணம் செய்து கொள்ளும். உமக்கு வேண்டிய இராச்சியமும்[1], பொருளும் கொடுக்கிறேன் என்று சொன்னான்.

சோழ மன்னன் கூறியதனைக் கேட்ட நக்கீரர் அவனைப் பார்த்து

வெண்பா

ஆறோர்கடமை யடைவுடனே கொண்டுமிக
வீறாயுலகாளும் வேந்தனே - கூறாய்
எனக்கிவளுமே மகள்கா ணென்றன் மருமகன்
றனக்குரியளாவளினி தான்.

என்று சொல்லக் கேட்டு, சோழ மன்னன் ஏனையா மகள் என்கிறீர் அப்படிச் சொல்ல வேண்டாம். இவளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினான். அதற்கு நக்கீரர் சொல்லுகிறார். இப்போது இறந்தவளை மீண்டும் உயிர்ப்பித்தோம் அல்லவா அதனால் இவள் எனக்கு மகள் அல்லவோ என்றார். அதுவுமல்லாமல் நம்முடைய மருமகன் ஒரு பையன் இருக்கின்றான் அவனுக்கு இவளை கட்டிவைக்க வேண்டுமென்று வெகு பிரயாசைப்பட்டு[2] இராத்திரி யெல்லாம் இவளுடனே தர்க்கம் செய்தோம் என்றார்.

அதுகேட்ட சோழ மன்னன் மிகவும் மகிழ்ச்சி யடைந்து தேவரீர் தங்கள் மருமகனுக்குக் கொடுக்க நாங்கள் எத்தனை புண்ணியம் பண்ணினோமோ நல்லது அப்படியே மருமகனை

1. இராச்சியம் - நாடு. 2. பிரயாசை - முயற்சி.

அழைத்துவரச் சொல்லுங்கள் ஐயா என்றான். உடனே நக்கீரர் அங்கிருந்தபடியே அடா விறகு தலையா இங்கே வாடா என்றழைத்தார். அவர் கூப்பிட்டவுடன் பாசிப் பல்லும், பூசமுகமும், வெந்த வீட்டுக் கழி மரம் போல் காலும் கையும், அரையில் கட்டிய கொடியும் அதிலே சொருகிய அரிவாளும் இந்தவித கோலத்துடனே விறகு தலையன் அங்கு வந்து நின்றான்.

அவன் வந்து நின்ற கோலத்தைப் பார்த்தவுடனே தமிழறிவாளும் பார்த்து முன்னாலே நாம் இவனைக் கடைத்தெருவில் பார்த்துக் காறி உமிழ்ந்தோமே! அவனே இங்கு வந்துள்ளானே இது என்ன அதிசயம் என்று எண்ணி வெட்கித் தலை குனிந்து நின்றாள். அவள் மனம் மிகவும் சஞ்சலமுற்றது[1]. இதனைக் கண்ட சோழ மன்னன் மிகவும் வியாகூலத்துடனே[2] நக்கீரரைப் பார்த்து, சுவாமி தமிழறிவாள் இருந்த இருப்பும், அவளின் அழகும், அறிவும், பெரும்புகழும் இந்த நாடே அறியும் அப்பேர்ப்பட்டவளுக்கு இவனை கட்டுவிக்கப் போகிறேன் என்கிறீர்களே, சரி இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. தேவரீர் தங்கள் சித்தத்துக்குச் சரியானபடி செய்து கொள்ளுங்கள் என்றான்.

உடனே தமிழறியும் மடந்தை நக்கீரர் பாதத்திலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கிவிட்டு, எழுந்து கைகட்டி நின்று

---

1. சஞ்சலம் – மனக்கவலை. 2. வியாகூலம் – மனவருத்தம்.

வெண்பா

பாதம்பணிந்தேன் பழையதமிழ்முனியே
ஏதுமறியேனினியுரையேன் - பேதையேன்
செய்துபிழைபொறுத்துத் திருவுளத்துக்கேற்கச்
செய்துவித்துக் கொள்ளு மினி.

என்று சொல்லிச் சிந்தை வியாகூலமாய் நொந்து கொண்டிருந்த தமிழறிவாளையும், சோழ மாமன்னனையும் பார்த்து நக்கீரதேவர் முற்பிறப்பு உணர்த்திய விபரம், கேளும் சோழ மன்னனே என்று முன் பிறப்பிலே தமிழறிவாள் அரசகுமாரியாகவும், இந்த விறகுதலையன் அரசகுமாரனாகவும் இருந்து இவர்களிருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் காதல் கொண்டதும், நயவஞ்சக குட்டரோகியால் இவர்கள் இறந்ததும், பின் வந்து மரகதவடிவு வயிற்றிலே இவள் மகளாகப் பிறந்ததும், அவன் விறகு தலையன் மகனாகப் பிறந்ததும், இந்த பிறவியிலே அவள் அவனுடன் பனிரெண்டு ஆண்டுகள் கூடிவாழும் நிலையும், இதற்காகவே நான் வந்து இரவெல்லாம் தமிழறிவாளிடம் தர்க்கம் செய்து அவளை வென்று இவனுக்கு மணம் முடித்து வைப்பதும், இவை யெல்லாம் ஒளவையார் ஆதியோடந்தமாக சொல்லிச் சென்றபடியினாலே நாம் இங்கு வந்து இக்காரியத்தை செய்கிறோம் என்றார்.

அப்பொழுது சோழ மன்னனும், தமிழறிவாளும், மரகதவடிவும் நக்கீரரை வணங்கி,

தேவரீர் சித்தத்திற்குச் சரியானபடி செய்து கொள்ளுங்கள் என்றனர். அதற்கு நக்கீரதேவர் தமிழறிவாளைப் பார்த்து

வெண்பா

ஊறுமுறையூரே ஒண்டியாங் கன்னிகையின்
பேருந்தமிழறிவாள் பேராமோ – நேரா
யுனைவிரும்புவாளை யுன்றெய்வந்தந்த
மனைவியிடத்துப் போயிருந்து வாழ்.

என்று சொல்லிவிட்டு, அந்நேரமே பச்சை பந்தல் போடுவித்து நல்ல முகூர்த்த வேளையிலே, விறகு தலையனுக்குத் தமிழறிவாளைத் திருமணம் செய்து வைத்து சோழ மன்னனைக் கொண்டு இவர்கள் இருப்பதற்கு ஊரும், உப்பரிகையும் வழங்கச் சொல்லி, பூஷண வகைகளும்[1] கொடுத்து நீங்கள் இரண்டு பேரும் சுகமாக வாழ்ந்து ஔவையார் ஆசீர்வாதத்தின்படி சிவனுடைய பாதாரவிந்தம் சேரக்கடவீர். நீங்கள் உங்கள் அரண்மனைக்குச் சென்று நன்றாக வாழ்ந்து வாருங்கள் என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

அப்போது இவர்கள் இரண்டு பேரும் நக்கீரர் பாதத்திலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி விட்டு தங்கள் அரண்மனைக்குப் போனார்கள். பின்னர் நக்கீரருக்குச் சோழமன்னன்

---

1. பூஷண வகைகளும் – மரியாதைகளும்.

ஒருவரி பூஷணம் கட்டு வர்க்கமும்[1] கொடுத்துப் பச்சை பல்லக்கும் வழங்கி அவரை வணங்கி மதுரை நகர் அனுப்பி வைத்தான்.

நக்கீரரும் சோழ மன்னரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு மதுரை வந்தார். அங்கே பாண்டிய மன்னனும், தமிழ்ச் சங்கத்தாரும் எதிர் கொண்டு வந்து வரவேற்று மகிழ்வோடு நக்கீர தேவரை அழைத்துக் கொண்டு போனார்கள். நக்கீரரும் உறையூர் சென்று தமிழறிவாளை வென்ற விபரம் எல்லாம் விரிவாகக் கூறினார். அதுகேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்த பாண்டிய மன்னர் நக்கீரருக்கு வேண்டிய பரிசுகள் வழங்கினார். சங்கத்தாரும் மிகவும் மகிழ்ச்சி யடைந்தனர்.

நக்கீரர், சங்கத்தாருடன் கூடி சங்கப்பலகையின் மீது எழுந்தருளினார். இப்பால் தமிழறிவாளும் ஔவையார் அனுக்கிரகப்படி[2] இருபத்தைந்து வயதளவும் கன்னி கழியாமல் இருந்து பின்பு நக்கீரதேவர் அருளினால் முன் பிறப்பு விபரம் அறிந்து தன் கணவனுடன் பன்னிரண்டு ஆண்டு காலம் சகலவிதமான வசதிகளையும், மிகுந்த மகிழ்வோடு ஆண்டு அனுபவித்துவிட்டு பின் இருவரும் மோட்சமடைந்தனர்.

---

2 கட்டுவர்க்கம் – பலவித உடை. 2. அனுக்கிரகம் – அருள்.

எமது வெளியீடுகள்

அழகரந்தாதி	100-00
தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்	100-00
தமிழ் எண்ணும் எழுத்தும்	80-00
தொல்காப்பியம்-சொல்லதிகாரம் உரைக்கொத்து	425-00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் உரைக்கொத்து	440-00
தணிகைக் கலம்பகம்	25-00
சிவபாரத சரிதம்	16-00
இராசகோபால மாலை	18-00
திருவேட்டை நல்லூர் ஐயனார் பள்ளு	26-00
குந்தமாலா	40-00
வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி	8-00
நாலுமந்திரி கும்மி	15-00
ஆஸ்தான கோலாகலம்	80-00
பொன்னர் சங்கர் அம்மானை	40-00
திருக்குறள் ஜைன உரை	75-00
வைத்தியநாதஸ்வாமி திருவிளையாடல்	8-00
நாகை கனகசபைநாதன் உலா	50-00
களாபூர்ணோதயம்	40-00
பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்	14-00
சுந்தரி அம்மானை	12-00
பதிப்பு நெறிமுறைகள்	10-00
புல்லையந்தாதி	12-00
சோமயாகப் பெருங்காவியம்	19-00

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.